# சாயி மகராஜ் குருவை தேடி
# SAI MAHARAJ GURUVAI THEDI


| ஆண்டு: 7 | இதழ்: 06 | நவம்பர் - 2025 | விலை - ரூ.20/- |
|---|---|---|---|
| VOL:7 | ISSUE: 06 | November - 2025 | Rs. 20/- |




# சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

## அரிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி எண்: 88258 31068.**

**தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே**

**பணம் அனுப்பவேண்டிய முகவரி:**

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

**G- PAY, PHONE PAY, NO: 99418 16692**

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-6 நவம்பர்-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

# அமுத மொழி

## அன்புக் குடிநீதையேம்ம

நான் உனக்குத் தருவேன் என்று கூறியதை எப்படி உனக்கு தராமல் போவேன் என்று நினைக்கிறாய்! உனக்கு என்னிடம் பரிபூரண சரணாகதி இருந்தால் இப்படி பட்ட எண்ணங்கள் வருமா? என்னுடைய வாக்கின்மேல் உனக்கிருக்கும் நம்பிக்கை அவ்வளவுதானா?

என்னிடம் உனது கவலைகளை ஒப்படைத்துவிட்டு நிம்தியாக இரு, நான் பார்த்துக் கொள்கின்றேன் என்று உறுதி கூறிய பின்பும் நீ உனது கவலைகளை எண்ணி வருத்தப்பட்டால், நீ என்னிடம் உனது கவலைகளை பூரணமாக ஒப்படைக்கவில்லை என்று தானே அர்த்தமாகின்றது.

உனக்கு நான் கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுவதைவிட எனக்கு வேறு வேலை என்ன இருக்கின்றது. நான் உனக்கு வழங்கிய வாக்குறுதிகளை கண்டிப்பாக நிறைவேற்றியே தீருவேன். இன்றைய சூழலில் சாத்தியப்படாது என்று நீ நினைக்கின்ற விஷயங்கள் எல்லாம் ஒரு நாள் சாத்தியப்படுத்திக் காட்டுவேன் !

அந்த நாள் கண்களில் கண்ணீருடன் என்னை தேடி வந்து நன்றி கூறுவாய். நிச்சயம் அது விரைவில் நடக்கும். என்னை பரிபூரணமாக நம்பு. விரைவில் உன் வாழ்க்கை வசந்தமாகும். அதுவரை நம்பிக்கையுடன், பொறுமையாக எனது பெயரை மனதிற்குள் உச்சரித்துவா. உன்னுடைய எல்லா பொறுப்புகளும் என்னுடையதே! கவலைப்படாதே! நாளை உன்னுடையதே!

**- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா**

**ஆசிரியர் பக்கம்...**

# அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் பேரருளால் எண்பத்து எட்டாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், ஸ்ரீ சிவசக்தி சத்சங் ஹாலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இம்மாத இதழை பழைய சீவரம் ஸ்ரீ சாயிநாதர் ஆலய நிறுவனர் திரு. ஷ்யாம் சாய்ராம் அவர்கள் வெளியிட, காவல் துறை அதிகாரி மாதவரம் திரு. கோபி அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்.

விழாவில் திரு. சுந்தர் சாய்ராம், திரு. கோபால் சாய்ராம், மற்றும் ஏராளமான சாயி தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திரு.சுந்தர்சாய், திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம், திரு.பாலாஜி, திருமதி.மாதங்கி பாலாஜி, திருமதி.சுகுணா இராஜசேகர், திருமதி.தனம் அகஸ்டின், ஆகியோர் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். திரு.பிரபு அவர்கள் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். திரு.அகஸ்டின்






அவர்கள் நன்றியுரை வழங்க விழா சிறப்பாக நிறைவடைந்தது.

சாய் தியானாலயா ஆத்மஞான குழுவின் அன்னதானக் குழுவினர் அனைத்து பக்தர்களுக்கும் சுவையான அறுசுவை உண வளித்து மகிழ்ந்தனர்.

சாய்பாபா தன்னிடம் வந்த பக்தர்களில் எந்த வேறு பாட்டையோ, பிரிவுகளையோ பார்த்ததில்லை என்பதை சத்சரி தத்தின் மூலம் அறிகின்றோம். இந்து மதத்தின் பக்தி, கர்மம், யோகம், ஞானம் என்ற நான்கு வழிகளி லும் தன்னை வழிபடுபவர்களை எந்தவித தடையும் கூறாமல் சாயி அனுமதித்தார்.

பக்தர்களும் அவரவர்களுக்குப் பிடித்த, தெரிந்த வழிகளில் சா யிபாபாவை துதிக்கின்றனர். அதிலும் தன்னை நம்பியவர் களுக்கு ஆறுவித சாஸ்திர சம்பிராதயங்களும் தேவையில்லை என்று பாபாவே கூறிய பிறகு, கடவுள் நம்பிக்கை இல்லாத வர்கள்கூட பாபாவை நம்ப ஆரம்பித்திருக்கின்றனர் என்பது பரம சத்தியம்.

அதுபோலவே நமது சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின் சார்பாக பாபா அரவணைத்துச் சென்ற ஆன்மீக



சேவைகளை ஒருகிணைத்து, "சாய் சங்கமம்" என்ற பெயரில் ஒரே அமைப்பின் கீழ், பஜன், திருவிளக்கு பூஜை, பிரார்த்தனை, ஹோமம், தியானம், அன்னதானம் என அனைத்து சேவைகளையும் இணைத்து கடந்த மாதம் 12.09.25 ஞாயிறு அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இம்மாத சாய் சங்கத்தில் உலகம் முழுவதும் நோய் நொடியின்றி அமைதி நிலவ வேண்டி ஸ்ரீ சுதர்சன ஹோமம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.



இனிவரும் காலங்களில் தொடர்ந்து மாதாமாதம் "சாய் சங்கமம்" நடைபெறும். வாசக அன்பர்களும், சாயி பக்தர்களும் திரளாக கலந்து கொண்டு பயன் பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றோம்.

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

# புத்தக வளர்ச்சி நன்கொடை


நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 85 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

## இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திரு. நாகராஜன், தஞ்சை.ரூ.500
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திரு. ராஜேஷ், கூடுவாஞ்சேரி, ரூ 150.
திருமதி. கலாவதி, அயனாவரம். ரூ.150.
திரு.ராஜசேகரன், குடந்தை.ரூ.150.
திரு. வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.
திருமதி. இந்துமதி, அயனாவரம்.ரூ. 100.
திரு. நடேசன், திருவாரூர். ரூ.100
திரு. பார்வதி ராஜேந்திரன், சென்னை. ரூ.100.

– வே.ஸ்ரீராம்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.



# சாய்சரிதம்-20

## கதை வடிவில்

நம்முடைய கடந்த சென்மத்தில் நாம் செய்த நல்வினைகளே இந்த சென்மத்தில் முனிவர்களை அறிந்து அவர்களோடு தொடர்பு வைத்திருத்திருப்பதற்கு முதற் காரணமாகும். பழங்காலத்தில் இருந்தே இவ்வுலகினில் முனிவர்களுடைய ஆசிரமங்கள் இருந்து வருகின்றன.

உலகினில் பல்வேறு இடங்களில், பல்வேறு முனிவர்களாக, ஞானிகளாக தம்மைத்தாமே தோற்றுவித்துக்கொண்டு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை அவர்கள் நிறைவேற்றுகின்றார்கள். அவர்கள் பல்வேறு இடங்களில் செயலாற்றிய போதும் அவர்கள் அனைவரும் ஒருவரேயாவார்.

பரம்பொருள் என்கின்ற பொதுவான பேராற்றலின் கீழ் அவர்கள் அனைவரும் ஒத்திசைவுடன் செயல்புரிகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மற்றவர்கள் அவரவர்களின் இடத்தில் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பது மிக நன்றாகவே தெரியும். தேவை ஏற்படும்போது அடுத்தவரின் வேலையை அவர்கள் நிறைவு செய்வார்கள். இதை விளக்கும் ஒரு நிகழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

முதலில், பாபாவால் ஹேமாட்பந்த் என்று அழைக்கப் பட்ட எனக்கு நேர்ந்த ஒரு அனுபவத்தை கூறுகின்றேன். அப்போது நான் பம்பாய் புறநகர் பகுதியான



பாந்த்ராவில் பல ஆண்டுகளாக ரெஸிடெண்ட் மாஜிஸ்ட்ரேட்டாக பணிபுரிந்து வந்தேன். அப்போது பீர்மௌலானா என்னும் புகழ் பெற்ற ஞானி ஒருவர் அப்பகுதியில் வசித்துவந்தார்.

பல மதத்தினரும் அவரின் தரிசனத்தைப் பெறுவது வழக்கம். என்னுடைய நண்பர்கள் அவரைச்சென்று சந்திக்கும்படி பலநாட்களாக என்னிடம் வற்புறுத்தியது உண்டு. ஆயினும் என்ன காரணத்தாலோ என்னால் பீர்மௌலானாவை தரிசிக்க முடியவில்லை. அதற்குப்பின் பல ஆண்டுகளுக்குப் பின்னால்தான் எனது முறை வந்ததுபோலும்.

நண்பர் நானா சாகிப் சாந்தோர்கர் மூலம் நான் சீரடிக்கு அழைக்கப்பட்டு சீரடியில்

பாபாவின் அருகிலேயே அவருடைய தர்பாரில் சேர்த்துக்கொள்ளப் பட்டேன். துரதிர்ஷ்டம் உள்ளவர்கள் இம்மாதிரியான தொடர்பை தவறவிடுகின்றார்கள். அதிர்ஷ்டசாலிகள் மட்டுமே அதை இறுக்கிப் பிடித்துக் கொள் கின்றார்கள்.

திரு. V.H. டாகூர் என்பவர் வருவாய்துறை அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலை செய்து வந்தார். அவர் ஒரு முறை தெற்கு மஹாராட்ஷ்டிரம் அருகில் உள்ள வட்காங் என்னும் ஊருக்கு சர்வே செய்ய தனது கோஷ்டியுடன் வந்தார். அங்கு அவர் கன்னட முனிவர் ஒருவரை கண்டார். அவர் அப்போது " விசார சாகரம்" என்ற நூலை தனது பக்தர்களுக்கு விளக்கிக் கூறிக்கொண்டிருந்தார்.

திரு. டாகூர் அவரிடம் சென்று அவரை பணிந்து வணங்கினார். அவரை ஆசீர்வதித்த முனிவர் அவரை நோக்கி நீ இந்தப் புத்த கத்தை கற்க வேண்டும். அப்படி நீ செய்தால் உனது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும் எதிர்காலத்தில் நீ உனது அலுவல் நிமித்தம் வடக்கே செல்லும் போது, ஒரு பெரிய முனிவரை சந்திப்பாய். அவர் உனது எதிர்காலத்திற்குண்டான வழியை காண்பிப்பார். உனது மனதிற்கு நிம்மதியைக்கொடுத்து உன்னை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்வார் என்றார்.

பின்னர் அவர் ஜூன்னார் என்ற ஊருக்கு மாற்றப்பட்டார். அங்கு செல்ல வேண்டுமாணால் அவர் நாணேகாட் என்ற மலைத் தொடரை கடந்து செல்ல வேண்டும். அந்த மலைத்தொடர் மிகவும் செங்குத்தாக இருந்தது. அதைக் கடக்க எருமை மாட்டைத் தவிர வேறு எந்தவித போக்குவரத்து வசதியும் இல்லை. எனவே மலைத் தொடரை கடப்பதற்கு அவர் எருமை மாட்டின் மேல் சவாரி செய்யவேண்டியதாய் இருந்தது. அதற்காக அவர் மிகுந்த சிரமப்பட்டார்.

பின்னர் அவர் பதவி உயர்வு பெற்று கல்யாணுக்கு மாற்றப் பட்டார். அங்கு அவருக்கு நானா சாஹேப் சாந்தோர்கரின் பழக்கம் ஏற்பட்டது. அவர்தான் பாபாவைப்பற்றி அவருக்கு எடுத்துக்கூறினார். அதன்மூலம் டாகூர் பாபாவை தரிசிக்க விரும் பினார். அவர் விரும்பிய மறுநாள் நானா தான் சீரடி செல்வதாகவும் தன்னுடன் சீரடிக்கு வரும்படியும் அழைத்தார். ஆனால் டாகூர் ஒரு சிவில் வழக்கு சம்பந்தமாக தாணே கோர்ட்டில் ஆஜராக வேண்டியிருந்தது. ஆகையால் நானா தனியாக சீரக்குச் சென்றார். டாகூரால் சீரடிக்கு செல்ல முடிய வில்லை.

ஆனால் தாணே கோர்ட்டில் வழக்கு தள்ளிப்போடப்பட்டது. டாகூர் நானாவுடன் சீரடிக்குப் போகமுடியாததற்கு மிகவும் வருத் தப்பட்டார். எனினும் தனியாக சீரடிக்குப் புறப்பட்டுப் போய் நானாவுடன் சேர்ந்து கொள்ளலாம்



என்று சீரடிக்குப் பறப்பட்டுச் சென்றார். அங்கு சென்றவுடன் தான். நானா பாபாவை தரிசித்துவிட்டு புறப்பட்டுவிட்டார் என்பதை அறிந்தார்.

இருப்பினும் அவரது வேறு நண்பர்களின் மூலம் பாபாவிடம் அழைத்துச் செல்லப்பட்டார். டாகூர் பாபாவைச் சந்தித்து அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். பாபாவைப் பார்த்ததும் அளவுகடந்த மகிழ்ச்சியில் திளைத்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது. உடம்பு புல்லரித்தது. பாபாவை நோக்கி தாயைக்கண்ட குழந்தையைப் போன்று நின்றார்.

கருணைக்கடலாகிய பாபா அவரைப் பார்த்து இந்த சீரடிக்கு வரும்வழி, கன்னடதேச முனிவரின் உபதேசங்களைப் போன்றோ, நாணேகாட்டின் எருமைச் சவாரியைப் போன்றதோ அவ்வளவு எளிதானதன்று. என்னுடைய ஆன்மீக வழி மிகக் கடுமையானதால் நீர் கடுமையான முயற்சியை கைகொள்ள வேண்டும் என்றார்.

தான் மட்டுமே அறிந்த கன்னட முனிவரின் சொற்களையும், அடையாளங்களையும் பாபாவின் வாய்மூலமாக கேட்டதும் டாகூர் ஆனந்தக்களிப்பில் மூழ்கினார். கன்னடதேச முனிவர் கூறிய பெரிய முனிவரை கண்டுவிட்டதாக மனம் மகிழ்ந்து இரண்டு கைகளையும் தன் தலைக்குமேல் உயர்த்தி வணங்கி சாஷ்டாங்கமாக பாபாவின் பாதத்தில் விழுந்து தன்னை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்.


அவரிடம் பாபா கூறினார். கன்னட முனிவர் உன்னிடம் கூறியது சரியானதே! ஆனால் அவை வாழ்க்கையில் கடைபிடிக்கப்பட வேண்டும். வெறும் கல்வியிலும், உபதேசத்திலும் பயன் ஒன்றும் இல்லை. அவர்கூறியதை கேட்டு சிந்தித்து அதன் வழியில் நிற்க வேண்டும். இல்லாவிடில் பயன் ஏதும் இல்லை. குருவின் அனுகிரகம் இல்லாவிடில் வெறும் ஏட்டுப் படிப்பினால் எந்தப் பயனும் கிடைக்காது என்றார் பாபா.

விசார சாகரம் என்ற தத்துவ நூல் டாகூரால் பலகாலமாக

படிக்கப்பட்டு வந்தது. ஆனால் சீரடியில் பாபாவின் மூலம் அவருக்கு நடைமுறையான வழி காண்பிக்கப்பட்டது.

பூனாவைச் சேர்ந்த அனந்தராவ் பாடண்கர் என்ற பெருந்தகை ஒருவர் பாபாவின் தரிசனத்தைப் பெற விரும்பினார். அவர் சீரடிக்கு வந்து பாபாவின் தரிசனத்தைப் பெற்றார். அவரது ஆவல் பூர்த்தி செய்யப்பட்டது. அவர் பாபாவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கியபின் பாபாவிடம், பாபா நான் ஏராள மாகப் படித்திருக்கின்றேன். வேதங்கள், வேதாந்தங்கள், உபநிஷதங்கள், இவைகளைப் பயின்றும் புராணங்களை கேட்டும் இருக்கின்றேன் என்றாலும் எனக்கு மனநிம்மதி இல்லை. எனவே எனது கல்வி அறிவு பயனற்றது என்று அறிந்து கொண்டேன்.

எளிய கல்வியறிவு இல்லாத ஒன்றுமறியாத பக்தியுள்ள மக்கள் என்னைவிட சிறந்தவர்கள் என்று நினைக்கத் தோன்றுகின்றது. மனம் அடங்கினாலன்றி நூலறிவால் ஒரு பயனுமில்லை என்று அறிந்து கொண்டேன். தங்களுடைய கருணைப் பார்வை ஒன்றினாலும், விளையாட்டான மொழிகளாலும் தாங்கள் மக்களுக்கு மனச்சாந்தியை வழங்குகின்றீர்கள் என்று கேள்விப் பட்டேன். எனவே எனக்கு நிம்மதி கிடைக்கும் என்று இங்கு வந்திருக்கின்றேன். தயவுசெய்து என் மேல் இரக்கம் காட்டி என்னை ஆசீர்வதியுங்கள் பாபா என்று கூறினார்.



அதற்கு பாபா ஒரு உருவகக் கதை ஒன்றை கூறினார். ஒரு முறை ஒரு வணிகன் இவ்விடம் வந்தான். அவன் முன்னால் குதிரை ஒன்று (லத்தி) ஒன்பது உருண்டைகளாக சாணம் இட்டது. வணிகன் சாணம் தானே என்று உதாசீனப் படுத்தாமல் அந்த ஒன்பது சாண உருண்டைகளையும் தனது வேட்டியில் பிடித்து பத்திரப்படுத்திக் கொண்டான். இச்செயலின் மூலமாக அவன் மன அமைதியை அடைந்தான். என்றார்.

இந்த கதையின் உட்பொருள் திரு. பாடண்கருக்கு புரியவில்லை. எனவே அவர் தாதா கேல்கரிடம் பாபா சொன்ன கதையின் உட் பொருள் என்ன என்று கேட்டார். எனக்கும் பாபா சொல்வது

அனைத்திற்கும் பொருள் புரியாது என்றாலும் பாபாவுடைய தெய்வீக அகத்தூண்டுதலால் நான் அறிந்து கொண்டதை கூறுகின்றேன். குதிரையே கடவுளின் அருள். ஒன்பது சாண உருண்டைகள் பக்தியின் வகைகள் அதாவது, 1. கேட்டல், 2 வேண்டுதல், 3.நினைவில் கொள்ளுதல், 4. பாதங்களை சரணடைதல். 5.பூஜை, 6. வணங்குதல், 7. சேவை, 8. நட்பு, 9. தன்னையே இறைவனுக்கு அளித்தல். இவைகள் பக்தியின் ஒன்பது வகைகள்.

இவைகளில் ஏதாவது ஒன்றையாவது நம்பிக்கையுடன் பின்பற்றப்பட்டால் பரமாத்மா மகிழ்வெய்தி பக்தனின் உள்ளத்தில் இருந்து தாமே வெளிப் படுவார். ஜபம், தவம், வேத பாராயணம், வேத ஞானம், வெறும் சம்பிரதாயமான பஜனை இவைகளால் சிறும் பயனில்லை. அன்பான பக்தியே தேவை. லத்திகளை சேகரித்த வணிகனைப்போன்று உங்களைக்கருதிக் கொள்ளுங்கள். ஒன்பது வகை பக்தியை சேகரிப்பதில் அவன் கொண்ட ஆர்வத்தினைப் போன்று இருங்கள். அப்போதுதான் நிலையான மனதினைப் பெற்று அமைதியை அடைவீர்கள் என்பதாக இருக்கலாம் என்று தாதா கேள்கர் விளக்கினார்.

அடுத்தநாள் பாடண்கர் பாபாவை வணங்கச் சென்ற போது பாபா அவரைப் பார்த்து ஒன்பது லத்திகளை சேகரித்துக் கொண்டீர்களா? என்று கேட்டார் அதற்கு பாடண்கர், தான் ஒரு முட்டாள், நீங்கள்தான் என்னை ஆதரித்து அருள் செய்ய வேண்டும். உங்களது அருளால்தான் நான் அவைகளை எளிதாக சேகரித்து மன அமைதியும் நன்மையும் அடைவேன் என்று பாபாவின் பாதத்தில் வீழ்ந்து பணிந்தார்.

பாபா பாடண்கர் தலையில் கை வைத்து ஆசீர்வதித்து, நீ மன அமைதியும், நன்மையும் அடைவார் என்று கூறி ஆறுதல் அளித்தார். பாடண்கர் அளவு கடந்த ஆனந்தமும் மகிழ்ச்சியும் அடைந்தார்.

பாபா எங்கும் நிறைந்த பேரறி வையும், மக்களை திருத்துவதற்கு சரியான பாதையில் அவர்களை நெறிப்படுத்துவதையும் இக்கதை யின் மூலம் கவனியுங்கள். ஒரு முறை பண்டரீபுரத்தில் இருந்து ஒரு வக்கீல் பாபாவைக்காண சீரடிக்கு வந்து பாபாவை தரிசித்தார். பாபா கேட்காமலே அவரிடம் சிறிது காணிக்கையும் அளித்தார். பின்பு ஒரு மூலைக்குச் சென்று அமைதியாக அமர்ந்து அங்கு நடைபெறும் சம்பாஷனைகளை கேட்க ஆர்வமுள்ளவராக அமர்ந்து கொண்டார்.

பக்தர்களிடம் பேசிக்கொண்டி ருந்த பாபா, சட்டென்று வக்கீல் பக்கம் திரும்பி, மக்கள் எவ்வளவு வஞ்சம் உடையவர்களாக இருக் கின்றார்கள் தெரியுமா? அவர்கள் பாதங்களில் விழுகின்றார்கள். கேட்காமலே தட்சிணை

அளிக்கின்றார்கள். ஆனால் முதுகிற்குப் பின்னால் சென்று திட்டுகின்றார்கள். இது எவ்வளவு அற்புதமாக இருக்கின்றது என்று கேலியாகக் கூறினார்.

மசூதியில் இருந்த ஒருவருக்கும் இக்குறிப்பு விளங்கவில்லை. வக்கீல் இதை கிரகித்துக்கொண்டார். ஆனால் அமைதியாக இருந்தார். பின்பு வாடாவிற்கு திரும்பியபோது, தீட்சித் அவர்களிடம், பாபா குறிப்பிட்டது மிகச்சரியான உண்மையாகும். இக்கருத்துக்கள் எனக்குண்டானதாகும். அதாவது மற்றவர்களைத் திட்டுவதோ, அவதூறு பேசுவதிலோ மனம் போன போக்கில் போகக்கூடாது என்று எனக்கு கூறப்பபட்ட குறிப்பாகும்.

நான் இங்கு வருவதற்கு முன்பு, எங்களது வக்கீல் அறையில், எங்களுக்குள் சாய்பாபாவின் பின்னால் செல்வதால் மக்களுக்கு ஏற்படும் நோய் நொடிகள் மருந்தில்லாமல் குணப்படுத்தப்படுமா? என்ற வாதம் நடந்தது. நிரம்ப படித்த வக்கீல் மற்றும் நீதிபதிகள் பலரும் இதில் கலந்து கொண்டு, விவாதித்தோம் அதில் சாயிபாபாவும் பலவாறாக அவதூறாகப் பேசப்பட்டார். இதில் நானும் கலந்து கொண்டேன்.

இப்போது பாபா எனது ஒழுங்கீனத்தை எனக்கு சுட்டிக் காட்டினார். இது எனக்குரிய கண்டனமாகாது உபதேசமாகும். அதாவது நான் பிறரை தன்னிச்சையாக குறை கூறுவதோ, பிறர் காரியங்களில் தலையிடுவதோ கூடாது என்பதேயாகும். சீரடி பண்டரீபுரத்தில் இருந்து 300 மைல் தூரத்தில் இருக்கின்றது. எனினும் அங்குள்ள பார் கவுன்ஸ்லிங்கில் என்ன நடைபெற்றது என்பதை இங்கிருந்து தனது பேரறிவால் பாபா அறிந்திருக்கின்றார்.


இடையில் உள்ள ஆறுகள், காடுகள், மலைகள் யாவும் அவர்தம் அனைத்தையும் உணரும் பார்வைக்கு தடை செய்யவில்லை. அவர் எல்லோருடைய இதயங்களையும் பார்க்கமுடியும். படிக்க முடியும். ஏதும் அவருக்கு ரகசியமாக மறைக்கப்பட்டதன்று. மனிதன் பக்கத்தில் இருந்தாலும், எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அவன் சாயிபாபாவின் எங்கும் நிறைந்த கூர்ந்த பார்வையில் இருந்து தப்ப முடியாது. என்று வக்கீல் அறிந்து கொண்டார். இவ்வாறாக அவர்தம் தீய குணங்களில் இருந்து திரும்பி நல்ல வழிகளில் திருப்பிவிடப்பட்டார்.

இது வக்கீலுக்கு மட்டும் இன்றி மனிதர்கள் அனைவருக்குமாக பாபா கூறியதாகும். அனைவரும் இந்த நியதியை உள்ளத்தில் கொண்டு அதனால் வரும் பயனை அடைய வேண்டும். பாபாவின் பெருமை ஆழங்கான முடியாதது. அவ்வாறே அவர்தம் அற்புத லீலைகளுமாகும். ஏனெனில் அவரே பரப்பிரம்மமாகும்.

**ஸ்ரீ சாயியைப் பணிவோம்!**

**சகல நன்மைகளையும் பெறுவோம்!**

**தொடரும்**




குரு வாழ்க! சற்குருவே துணை என வணங்கி போற்றி நமது சாய் சொந்தங்கள் அனைவருக்கும் சுந்தர் சாய் கரம் குவித்து சிரம் தாழ்த்தி வணங்கி, நமது திருவருள் தேடி தொடரில் நவம்பர் மாத இதழில் மிகவும் முக்கியமாக நமது ஆரம்ப காலத்திலிருந்து ஆன்மீக பாதையில் நம்மை வழிநடத்தும் பரம் ஜோதியான சத்ய சாய் பகவான் நூற்றாண்டு விழா மாத மாக அமைவதால் எண்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கி சா யியே சர்வம் என தெளிந்து சாயி பதமலர் பணிந்து என்னாளும் எமை தொடர்ந்து வழிநடத்தியருள நன்றியோடு வேண்டுகிறோம்.

இறையருட்பணியில் நமது ஆசிர்வாத அனுபவங்களை முழு மனமார்ந்த மகிழ்வுடன் உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள தளம் அமைத்து அருளும் யோகி ஸ்ரீராம் பாபாவிற்கு குறைந்த பட்சமாக எனது நன்றி களை உரித்தாக்குகிறேன். சாய் மகராஜ் குருவைத் தேடி இதழ்கள் குருவைத் தேடும் தாகம் மிகுந்த ஆன்மாக்களுக்கு அமிர்த மழை யாய் பொழியும் மேகக் கூட்டமாகி வழி நடத்துவது சாயி பகவான் சங்கல்பமே. ஆத்ம ஞானத்தை தெய்வீக அன்பு கலந்தூட்டும் அரிய பணி வாழ்க! வளர்க! எந்நாளும் அட்சயமாய்!

நமது "திருவருள் தேடி" அனுப வத்தில் நம்மை சிலர் வாழ்வில்

**சுந்தர் சாய்**
**9789404451**

தெய்வீக தகவல்களை பரிமாறவும், சவால்களை சமாளிக்க வேண்டிய கடினமான தருணங்களில் உற்ற நண்பராய் உதவிக்கரம் நீட்டவும், மனநலம் பேணும் மருந்தாய் சில வார்த்தைகளை நம்பிக்கையாய் வலுவூட்டவும் பாபா நமக்கு அளித்த கட்டளைகளை தன்னலமின்றி நிறை வேற்றும் வேளைகளில் பரிபூரண சத்தியமாய் சாய் நம்முடன் பயணித்து வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துவது ஒரு அற்புதமான, அழகான ஆன்மீக பயண அனுப வமே என்பதை சென்ற இதழிலேயே நாம் பகிரந்து கொண்டோம். இன்றளவும் அந்த அனுபவங்கள் தொடர்ந்தே நிகழ்வது நமக்கு இப்பிறவியில் கிட்டிய வரமே!


ஒருமுறை இலங்கைப் பயணத் தின் பொழுது, சாயிநாதன் சரணால யத்தில் அமர்ந்து நாம ஜபம் செய்யும் பொழுது ஒரு பக்தை கண்ணீ ரால் பாபாவின் பாதங்களை நனைத் துக் கொண்டிருந்தார். அதில் சற்றே மனம் உருகி அவரை நம்மருகே அழைத்து என்னவென்று விசாரிக்க, அவர் தான் ஆஸ்திரேலியா செல்ல கடினமாக முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாகவும், காரியங்களில் எந்த முன்னேற்றமும் இல்லை என கண்ணீர் வடித்தார்.

உடனே என்னிடமிருந்து ஒரு "ஷீரடி சாய் டாலர்" ஒன்றை அவருக்கு வழங்கி அதை உடனே கழுத்தில் அணிந்து கொள்ளவும், அதிக பட்சமாய் 3 மாதங்களுக்குள் அவர் ஆஸ்திரேலியா நாட்டிற்கு செல்வதை பாபா பார்த்துக் கொள் வார் என உறுதி கூறி ஆறுதல் வார்த்தைகள் மூலம் அவரது கண்ணீரை ஆனந்தமான பக்திமிகு நன்னீராய் மாற்றினேன்.

சொல்வதோ, செய்வதோ நாமல்லவே! பாபா அவருக்கு ஆசிர் வதித்தபடி அவர் ஆஸ்திரே லியா சென்று என்னுடன் தொடர்பி லிருக்க தொடங்கினார். பாபாவின் மீது முழு நம்பிக்கையையும் அளவற்ற அன்பையும் வெளிப் படுத்த ஆரம்பித்து நமக்கும் அளவின்றி நன்றி தெரிவித்தார்.

அவரது நம்பிக்கைக்கேற்ப அவரது வேலை நிரந்தரமானது. அவரது குடும்பத்தில் தாய் வீட்டில் இருந்த பிரச்சனைகளுக்கும் நமது ஆதரவு அவருக்கு தேவைப்பட, சவால்களை சமாளிக்க அவருடன் பயணித்து நம்பிக்கை ஊட்டும் கடமை நமக்களிக்கப்பட்டது. இவை மிகவும் சாதாரண நடவடிக்கை போன்று "காக்கை உட்கார பனம் பழம் விழுந்தது போன்று" ஒரு எதேச்சையான நிகழ்வாய் சென்று கொண்டிருந்தது.

அவரும் அடிக்கடி நம்மிடம் அவரது நெருங்கிய நண்பருடன் தான் ஷீரடி செல்ல மிகமிக ஆர்வமாய் இருப்பதாகவும் அதற்கும் நானே பாபாவிடம் வேண்டிக் கொள்ள வேண்டுமென்றார். வழக்கம் போல் பாபாவிடம் நம்பிக்கை வைத்து நீயே வேண்டிக்கொள். நிச்சயமாக நீங்கள் ஷீரடி வந்து தரிசனம் செய்வீர்கள் என நான் நம்பிக்கை வார்த்தைகளைக் கூறினேன். திடீரென்று ஒரு நாள் போனில் அழைத்து அப்பா நாங்கள் இலங்கை வந்து விட்டோம். சில நாட் களில் ஷீரடிக்கு வர இருக்கிறோம். நீங்களும் வாருங்கள் என்று



உற்சாகமாக பேசினார். எனக்கும் மகிழ்ச்சி. மறுநாளே ஒரு திருப்பம்!

மறுநாள் என்னைத் தொடர்பு கொண்ட நமது இலங்கை பக்தை ஒரே அழுகை, கோபம், ஏமாற்றம் என வழக்கம் போல் "அப்பா, பாபா என் வாழ்க்கையில் விளையாடு கிறார்?" நான் உடனே என்ன நடந்தது என்று சொல்லம்மா என்றேன் அவர் உடனே எங்கள் இருவரில் அவருக்கு மட்டும் இந்திய விசா கிடைத்து எனக்கு மறுக்கப்பட்டு விட்டது. இப்போ நான் எப்படி ஷீரடிக்கு வர இயலும் என மீண்டும் அழ ஆரம்பிக்க, நான் சிறிதும் பதட்டமின்றி நீ மிராக்கிள் என்றால் என்ன என புரிந்து கொள்ள வேண்டாமா? எனவே கவலைப்படாதே நாளை மீண்டும் முயற்சி செய் கிடைக்கும் என ஆறுதல் அளிக்க அவர் அப்படி யெல்லாம் கிடைக்காதே அப்பா என அவநம்பிக்கையுடன் பேசினார்.

நான் மீண்டும் நாளை ஒரு பேப்பர், பேனாவுடன் இந்தியன் எம்பசி அலுவலகம் சென்று ஒரு கடிதம் எழுதி, ஷீரடிக்கு செல்ல விரும்புவதால் தயவு செய்து எனக்கு விசா கொடுக்கவும் என எழுதிக்கொடு என்று உறுதி யாகச் சொல்ல அவர் சிறிது நம்பிக்கையுடன் சென்றார். மீண்டும் அடுத்த நாளே அலைபேசி அழைப்பு, உற்சாகத்துடன் "அப்பா நீங்கள் சொன்ன அடுத்தநாள் எனக்கு விசா கொடுத்து விட்டார்கள்" என்று மகிழ்ந்தார்.

நானும் விவரம் கேட்க, அவர் அடுத்த நாள் அலுவலகம் சென்று மனு எழுதத் தொடங்கும் முன் யாரோ ஒரு நண்பர் போனில் பேச, அழுதுகொண்டே முழுக் கதையையும் விவரித்திருக்கிறார். அதை அருகே கேட்டுக் கொண்டி ருந்த அதிகாரி, இவரது கண்ணீரைப் பார்த்து பரிதாபப்பட்டு மறுபரி சீலனை செய்து விசா வழங்கியிருக் கிறார்கள். இதெல்லாம் என்ன நண்பர்களே? பாபா மிராக்கிளா? அல்லது பாபா விளையாட்டா? நம்மை இதில் ஊடகமாக செயல் படுத்தி நமக்கும் பாராட்டை பெற்று தருகின்றாரே!

இதே பெண்மணிக்கு சோக மான பக்கங்களும் உண்டு. முழுமையாக விஷயங்களை பகிர வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. ஏனென்றால் பல வாசகர்கள் பாபாவை வெறும் அற்புதங்களை மட்டும் நிகழ்த்தும் ஓர் இயந்திரம் என்று எண்ணி, ஏமாந்து பாபா எனும் உயரிய அருட் தத்துவத்தை நம் அரிய வாழ்வில் தவறவிடக் கூடாது. பாபா வழிபாட்டை, தரிசனத்தை எல்லோரும் பெற்று விடுவதில்லை.

நம்மில் பலர் அறிந்த வகையில் இங்கு பாபாவை நம்பாதவர்களும், பாபா பற்றிய அனுபவங்கள் இல்லாதவர்களும் நிறைய பேர் உண்டு என்பதே உண்மை.

அவர் தன் மணவாழ்வில் சில தவறான மற்றும் மிகவும் உறுதியான சில விருப்பங்கள் நிறைவேற வேண்டும் என்றும், பாபா அதை நிறைவேற்றி வைத்தே ஆகவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். இந்த விஷயத்தில் நான் அவரிடம் மிக உறுதியாகவும் அதே சமயம் மென்மையாகவும் சில விவரங்களை எடுத்துரைத்தேன்.

எது நடக்க வேண்டுமோ அதை மட்டுமே பாபா தலையிட்டு முடித்து வைப்பார். நாம் தவறான முடிவை எடுத்து அதை நமக்கு நல்லதாக ஆக்க வேண்டும் என அடம் பிடித்தால் அவர் துணை வர மாட்டார். எனக்கூறி உங்களது தேர்வு தவறானது என என் உள்ளுணர்வு கூறுகின்றது என்பதை அவரிடம் தெளிவுபடுத்தினேன்.


இறுதியில் அவரது விருப்பமே முக்கியம் என்று முடிவெடுக்கப்பட்டு, பின்னால் வாழ்வின் பல ஏமாற்றங்களால் துன்பப்பட்டு மன வருத்தமடைந்தார். அவருக்காக நானும் ஆஸ்திரேலியாவுக்கு பயணப்பட்டு அவர் வாழ்க்கையை சீர் செய்ய தயாராக இருந்தேன். ஆனால் பாபாவின் விருப்பம் மாறாக இருந்தது.

இதன் மூலம் தவறான ஒரு விஷயத்தைப் பிடித்துக் கொண்டு, நமக்கு கிடைக்கும் முன்னறிவிப்பையும், வழி காட்டுதல்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு நாம் விரும்புவதே நமக்குக் கிடைக்க வேண்டுமென்கிற பிடிவாதமும், நமது விருப்பத்திற்காக பாபா தன் அற்புத சக்தியால் மாற்றி நமக்கு சாதகமாய் மாற்ற வேண்டும் என எண்ணுவது மிக மிக தவறானது மட்டுமின்றி பெருத்த ஏமாற்றத்திற்கு உள்ளாக வைக்கும் என்பதை நான் உணர்ந்த சமயம் அது.

பாபாவிடம் நமது வாழ்வின் சிக்கல்களை ஒப்படைத்து அவர் காட்டும் பாதையில் முழு நம்பிக்கை பயணித்தால் மட்டுமே, வாழ்வின் வியத்தகு மாற்றங்கள் உள்ளும், புறமும் நிகழும். இந்த அனுபவம் மட்டுமே நம்மை முன்னேற்றத்தில் செல்லும் வாழ்க்கைப் பாடம்.

இப்பொழுதும் கூட நமது சாய் அன்பர்களிடம் கேட்டுக்கொள்வது, பாபா நகொடுக்கும் எந்த முடிவையும் நான் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தைக் கொடு என்று பிரார்த்தனை செய்யவும் என்றும், அதே மனோபாவத்தை சக அன்பர்களிடமும் வலியுறுத்தும் படியும் கேட்டுக் கொள்கிறேன். அற்புதங்களை நிகழ அனுமதியுங்கள், ஆனால் அவற்றை எதிர் பார்ப்பதோ அல்லது பாபாவை சுயலாபத்திற்காக பயன்படுத்துவதோ வேண்டாம் என்பது நமது அபிப்பிராயம்,

மற்றொரு சம்பவம் அதே இலங்கை சரணாலயத்தில் பாபாவின் சங்கல்பத்தால் ஒரு நாள் சாய் சத்சரித பாராயணம் செய்ய அனுமதி கிடைத்து சாய் அன்பர்கள் ஒன்று கூடி பாராயணம் செய்த நேரம், ஒரு பக்தை என்னிடம் நான் இப்பொழுது



"இதெல்லாம் என்ன நண்பர்களே? பாபா மிராக்கிளா? அல்லது பாபா விளையாட்டா? நம்மை இதில் ஊடகமாக செயல் படுத்தி நமக்கும் பாராட்டை பெற்று தருகின்றாரே!"

தான் ஏகதின பாராயணம் குறித்து அறிந்து கொண்டேன். நானும் கலந்து கொள்ளலாமா? என ஆர்வமுடன் விசாரித்தார். பாராயணம் முடிந்தவுடன் என்னை தனிமையில் சந்தித்து தனது சொந்த பிரச்சினையை குறித்து விவரங்களைக் கூறி எனது உதவியைக் கோரினார்.

இளம் வயது 30க்குள் திருமணம் முடிந்து முதல் குழந்தை பிறந் திருக்கிறது. ஆனால் சில தவறான ஆலோசனைகளினால் கணவன் மனைவிக்குள் பிரிவு. பிறந்த குழந்தையைக் கூட முகம் பார்க்க வராத பிடிவாதக் கணவர். நமது மனதை மிகவும் பாதித்த அவரது துயரத்தைக் கேட்டு நாம் உடனே அவரிடம் இந்த கடினமான காலத்தில் உங்களுடன் கை கோர்த்து நடந்து நல்வழி கிடைக்க பாபாவிடம் பிராத்திப்போம் என நம்பிக்கை ஊட்டினேன்.

அவரும் ஒரு பெரிய நிம்மதி பெரு மூச்சுடன், தாங்கள் எனது பிரச்சினைக்கு தீர்வு செய்ய முடியுமா என்றும், முழு நம்பிக்கையுடன் ஒத்துழைப்பதாய் உறுதி கூறினார். அடுத்த நாளே நான் அவரது இல்லத்திற்குச் சென்று பிரார்த்தனை செய்யத் தொடங்கினோம். ஒரு நாள், ஒரு மாதம் இல்லை சுமார் ஒரு வருடம் பொறுமையுடன் எல்லாவித நாம ஜெபம், ஸ்லோக பாராயணம் என எல்லாவித வழிபாடுகளையும் செய்தார்.

உண்மையிலேயே தலை வணங்க வேண்டிய பொறுமை, நம்பிக்கை இரண்டுமே விதியை அசைக்கத்தான் செய்தது. நீண்ட நாட்களுக்கு பின் மீண்டும் அவர் வாழ்வில் வசந்தம் மலரத் தொடங்கி, கணவன் மனைவி சந்தித்து வாழ்வை சீர் செய்து கொண்டு சந்தோசமாக வாழ் கிறார்கள். பாபாவின் பரிபூரண ஆசிர்வாதத்துடன்.

சர்வம், சதா, சகலம் சத்குருவே! பரம சத்தியமான குருவருள் நம் அனைவருக்கும் என்றும் நிலைக் கட்டும் என விரும்பி வேண்டி, குரு வாழ்க! குருவே துணை! மீண்டும் தொடர்வோம் சாய் மகராஜ் குருவருளாய்.

**மீண்டும் தொடர்வோம்**


# வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞ்ஞானம்



பல காலங்களுக்கு முன்பாக தசார்ண தேசத்திற்கு தலைவனாக முக்தாசூடன் என்றொரு மன்னன் இருந்தான். அந்த மன்னனுக்கு கல்விகேள்விகளில் தேர்ந்தவர்களும், வசீகரிக்கும் அழகுடனும், வீர பராக்ரமத்துடனும், நல்லகுணங் களை அணிகலன்களாகக் கொண்ட வர்களுமான ஹேமசூடன், மணி சூடன் என்ற இரு மகன்கள் இருந் தனர். அந்த இரு வீரர்களும் ஒருநாள் வேட்டையிடுவதற்காக படை பரிவாரங்களுடன் ஓர் அடர்ந்த காட்டிற்குச் சென்றனர்,

அங்கு கண்ணில்பட்ட புலி, சிங்கம், காட்டெருமைகள், மான்கள், காட்டுப் பன்றிகள் ஆகிய மிருகங்களை வேட்டையாடிக் குவித்தனர். இப்படி அவர்கள் வீரப் பெருமிதத்தோடு வேட்டையாடி களைத்த அந்நேரத்தில், கருமேகங்கள் சூழ பலத்த இடி, மின்னலொடு கூடிய சூறாவளி காற்றானது சூழ்ந்துகொண்டது. இருள்மட்டுமே சூழ்ந்த அந்தநேரத்தில் எல்லா படை வீரர்களும் போன இடம் தெரிய வில்லை, ஹேமசூடனும், மணிசூடனும் மட்டும் குதிரை மீதேறி எப்படியோ தட்டுத்தடுமாறி வாழைத் தோட்டங்கள் மிகுந்த, ரம்ய மான, அமைதி சூழ்ந்த ஒரு முனிவ ரின் ஆசிரம குடிலை அடைந்தனர்.

அந்த இடத்தில் உருக்கிய தங்கத்தை போன்ற தேகத்தை யுடைய பிரகாசமான ஒளியு டைய மகாலட்சுமிக்கு இணை யானஒருபெண்ணைகண்டனர். அப் பேற்பட்ட அடர்ந்த இருள்சூழ்ந்த காட்டில் இப்படி யொரு பெண் தனிமையில் இருப்பதை கண்ட இராஜகுமாரர்கள் இருவரும் வியப்பில் ஆழ்ந்தனர். அப் பொழுது ஹேமசூடன், அந்த அழகிய பெண்ணின் மீது மோகம் கொண்டான். அவளை நோக்கி ஹேமசூடன், "சுந்தரியே நீ யார்? யாருடைய புதல்வி? என்ன காரணத்தினால் ஆள்நட மாட்டமில்லாத இவ்வடர்ந்த காட்டில் தனிமையில் வசிக்




கின்றாய்?" என்று வினவினான்.

இதனைக்கேட்ட அந்த பெண், அவர்களை மரியாதையுடன் நோக்கி, "இராஜ குமாரர்களே! வருக, தாங்கள் இந்த ஆசனத்தில் அமர்ந்து உங்களை அமைதிப்படுத்திக் கொள்ளுங்கள், நான் நீங்கள் பருகுவதற்கும், உண்பதற்கும் ஏதேனும் கொண்டுவருகிறேன், பின்னர் நாம் உரையாடலாம்" என்றாள். உள்சென்ற அவள் அவர்களுக்கு கனிகளும், பாலும் கொண்டுவந்து பரிமாறினாள், பின்பு, "இராஜகுமாரர்களே நீங்கள் சிரமத்தின் பெயரில் பெரும்புயலில் சிக்கி இந்த ஆசிரமத்தை அடைந்தீர்கள் என்று அறிகின்றேன். சிறிது நேரம் நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள், பெரும் தவசீலரும், பிரம்மஞானியும் என்னுடைய தந்தையுமாகிய ஸ்ரீ வியாக்கிரபாத மகரிஷி இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடுவார்" என்று கூறினாள்.



நாராயணன்

சற்றுநேரம் கடந்த பின்பு, ஹேம சூடன் அந்த அழகிய பெண்ணின் விருத்தாந்தங்களை கேட்கலானான். அதற்கு, அந்த கன்னிகை, "இராஜகுமாரர்களே! என்பெயர் ஹேமலேகை, என்னுடைய தாயாரின் பெயர் வித்யுத்பிரபா என்பதாகும். ஒருநாள் என்தாய் வேணா நதியில் நீராடவிரும்பி அங்கு சென்றாள். அப்பொழுது வங்கதேசத்து அரசனான சுஷேணன் நீராடுவதற்காக வந்தான். இருவரின் பார்வையானது ஒருவரையொருவர் கவர்ந்திழுத்தது, சுஷேணன், என்தாய் வித்யுத்பிரபாவின் அனுமதியோடு அவளோடு இணைந்துவிட்டு தன்னுடைய நாட்டினை அடைந்தான். மோகத்தினால் மதியிழந்த என்தாய் காலம் கடந்தபின்பு செய்வதறியாது திகைத்தாள், பின்பு என்னை பெற்றெடுத்து அந்தநதிக் கரையிலேயே கிடத்திவிட்டு, அவதூறுக்கு பயந்து அவள் எங்கேயோ சென்று விட்டாள்.

அந்தவழியாக வந்த ஸ்ரீவியாக்கிரபாத மகரிஷி என்னை கண்டு, என்மீது கருணைகொண்டு வளர்க்கலானார். அவருடைய அடைக்கலநிழலில் வளர ஆரம்பித்தேன், அவரே என்னுடைய தந்தை, என்தந்தை எனக்கு தர்ம, கர்ம, ஞான விசாரணைகளை அருளினார். இதனால் இங்கு நான் பயமற்று இருக்கிறேன். இந்த ஆசிரமத்தினுள்ளே கெட்ட புத்தியோடும், எதிர்மறை அதிர்வலைகளோடும் எவராலும் நுழையமுடியாது, எவர் வந்தாலும் நேர்மறை எண்ணங்களோடு மாற்றப்படுவார்கள், மீறி நுழைந்தால் அவர்கள் அரசர்களானாலும் சரி, அசுரர்களானாலும் சரி நாசத்தைமட்டுமே அடைவர். ஏனென்றால் இந்த இடமானது ஞானஒளியால் நிரம்பியிருக்கிறது.

இதே சமயத்தில் இராஜகுமாரன் ஹேமசூடனின் மனதின் எண்ணத்தை ஹேமலேகை அறிந்துக்கொண்டாள், அந்த தருணத்தில் ஹேமசூடன் தான் அவளை மணமுடிக்க விரும்புவதாக தன் விருப்பத்தை தெரிவித்தான். அதற்கு ஹேமலேகை என் தந்தை வந்ததும் அவரின் விருப்பம் போல் செயல்படுக என்றாள், அதேநேரத்தில் ஸ்ரீவியாக்கிரபாத மகரிஷி ஆசிரமக்குடிலுக்குள் நுழைந்தார். தன் தவவலிமையினாலும், தியானத்தின் சக்தியினாலும் ஹேமசூடனின் மனதை அறிந்தார், அதுவே இறைத்தன்மையின் சங்கல்பம் என்பதனையறிந்து அவர்களிருவரையும் ஆசிர்வதித்து திருமணத்தை நடத்திவைத்து அவர்கள் நாட்டிற்கு வழியனுப்பிவைத்தார்.

உடனே சிஷ்யன் குருவை நோக்கி எப்படி ஒருவரால் மனதின் செயல்பாடுகளை அறியமுடிகிறது என்று வினவினான். உடனே குரு அவனை நோக்கி, இது ஒருவரின் இடைவிடாத தவத்தின் பயனாகும். இங்கு ஸ்ரீவியாக்கிரபாத முனிவர் தன் தொடர்ச்சியான தியான, யோக மற்றும் தவப்பயிற்சியினால் இந்நிலைக்கு மேம்பட்டார். அதுமட்டுமல்ல, தொடர்ச்சியான தியான, தவம் நடக்குமிடமானது

அற்புதசக்திகள் நிரம்பிய சக்திக் கோட்டமாகும், அதனால் தான் ஹேமலேகை, பயமற்று தனிமையில் இருக்கமுடிந்தது.

இவ்வாறாக, ஹேமசூடன் ஹேமலேகையுடன் நாட்டை அடைந்து தன் தந்தையிடம் நடந்த அனைத்தையும் விவரித்தான். இதைக்கேட்ட முக்தாசூடன் மனம் மகிழ்ந்தவனாக அவர்கள் இருவரையும் வரவேற்று, உபசரித்தான். நாடே விழாக்கோலம் பூண்டது, முக்தாசூடன் நாட்டையே அலங்கரித்து ஹேமசூடன், ஹேமலேகை திருமண வைபவத்தை நடத்திவைத்தான். இப்படியே நாட்கள் நகர்ந்தன, திருமணத்திற்கு பின்பாக இளவரசன் ஹேமசூடன் சதாசர்வகாலமும் ஹேமலேகையின் பேரழகில் மயங்கியவனாக போகவாழ்கையிலேயே நாட்டம் கொண்டவனாக இருந்தான்.

ஆனால், ஹேமலேகையோ மாறாக எப்பொழுதும் ஏதோ வேறு லோகத்தில் இருப்பவள் போலவே காட்சியளித்தாள். இதனை கண்ணுற்ற இளவரசன், ஹேமலேகையிடம், "நீ எப்பொழுதும் தனித்தே இருக்கிறாய், இன்பசுகங்களில் ஆசையற்று காணப்படுகின்றாய், நான் உன்னிடம் மிகுந்த ஆசை வைத்துள்ளேன். நான் உன்னிடம் நெருங்கிப்பேச வரும்போதெல்லாம் காது கொடுக்காமல் அமைதியாக இருக்கின்றாய். நாமிருவரும் சேர்ந்திருந்தால் தானே சுகபோகங்களை அனுபவித்து இந்த மானிடப் பிறவியின் பயனை அடைய முடியும். என்ன ஆயிற்று? நான் பார்க்கும் போதெல்லாம் கண்களை மூடிக்கொண்டு வேறு லோகத்தில் இருப்பதைப் போல காணப் படுகின்றாய், என்றான்.

அந்த நேரத்தில் தன் பிரியமான கணவரின் வார்த்தைகளை கேட்ட ஹேமலேகை, அவன் சந்தேகங்களை களையும்பொருட்டு அழகிய புன்சிரிப்புடன் மோகத்தில் மூழ்கியுள்ள தன் கணவனான இளவரசனை மாற்ற நினைத்தாள், அவனை அருகில் அழைத்து வாழ்க்கையின் உண்மை நிலைதனை உணர்த்த விரும்பினாள். அவனுக்கு தெளிவை கொடுக்க, ஞானத்தை யுக்தியின் மூலமே உணரப்படவேண்டும் என்றெண்ணி பின்வருமாறு பேசத் தொடங்கினாள் ஹேமலேகை.

"இராஜபுத்திரரே! நான் சொல்லுவதை சற்றே கேளுங்கள், உங்களிடத்தில் பிரியமில்லாமல் இல்லை. இந்த உலகத்தில் பிரியம் என்பது என்ன? பிரியமில்லை என்பது என்ன? இதற்கான விடை தெரியாமலேயே குழம்பிய நிலையில் நான் தனிமையில் சிந்தித்தபடி இருக்கிறேன். உங்களுக்கு தெரிந்தால் எனக்கதனை சற்றே தெளிவுபடுத்துங்களேன்" என்றாள் ஹேமலேகை.

இதனைக்கேட்ட ஹேமசூடன், புன்சிரிப்புடன் பின்வருமாறு கூறினான். "பெண்களுக்கு பேதைமைகுணம் உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன், இப்பொழுது அதனை உன்னில் காண்கிறேன். பிரியம் பிரியமின்மை என்பது பசு, பக்ஷிகளுக்கு கூடத்தெரியுமே, எது சுகத்தை கொடுக்குமோ அது பிரியம், எது

துக்கத்தை அளிக்குமோ அது பிரியமின்மை. இது தெரியாமல் தானா இப்படி நேரத்தை வீணடித்துக்கொண்டு சிந்தித்தாயோ!" என்றான்.

உடனே ஹேமலேகை, "உண்மை தான் இளவரசே! பெண்களுக்கு பேதமைக் குணம் உண்டு, நல்ல ஆலோசனை செய்யும் சக்தி கிடையாது. அப்படியானால் இப் பேதைக்கு அறிவைபோதிப்பது உங்கள் கடமை, நீங்கள் என்ன நிவை தெளியவையுங்கள், நாம் எப்பொழுதும் போகத்திலேயே இருந்துவிடலாம். நீங்கள் சொன்னீர்கள் சுக, துக்கத்திலிருந்து தான் பிரியம், பிரியமின்மை உருவாகிறதென்று ஒரே பொருள் தானே காலதேச மாறுதலின் பெயரில் விகாரம் அடைகிறது, ஒரே பொருள் தானே சுகம், துக்கம் இரண்டையும் நமக்கு அளிக்கின்றது.

அப்படியிருக்க, எப்படி ஒன்று சுகத்தையும் மற்றொன்று துக்கத்தையும் கொடுக்கும், இது நம்மனதின் பேதம் அல்லவோ! உதாரணமாக, நெருப்பிலிருந்து வரும் வெப்பமானது குளிர்காலங்களில் நமக்கு சுகத்தையும் அதுவே கோடைகாலங்களில் பெரும் அசௌகரியத்தையும் கொடுக்கிறது, அது எப்படி இளவரசே ஒரே வஸ்து சுகம், துக்கம் இரண்டையும் வழங்குகிறது? அப்படியானால் உங்கள் கூற்றாகிய சுகத்திலிருந்து பிரியமும், துக்கத்திலிருந்து பிரிய மின்மையும் உருவாகின்றது என்பது பொய்யாகி விடுறதுதில்லையா.

இருப்பது ஒரே வஸ்து அதுவே காலதேச மாற்றங்களினால் வெவ்வேறு தன்மை பெறுகிறது அல்லவா. அதேபோல் இனிப்பு எல்லோருக்கும் பிரியமானதாக இருக்கிறது, அதுவே சர்க்கரைநோய் உள்ளவனுக்கோ பிரியமற்றதாக இருக்கிறது. இங்கேயும் வஸ்து ஒன்று தான் ஆனால், அதன் விகாரம் வேறு, மனிதன் எடுத்துக்கொள்ளும் பரிமாணமும் வேறு.

இதேபோன்றுதான் நாடு, நகரம், மனைவி, குழந்தைகள் எல்லோரும் அல்லவா. சுகம் வேண்டும் என்பதற்காக உலகத்தில் உள்ள எல்லாபோகங்களையும் ஒருவரால் அனுபவிக்கமுடியுமா என்றால் சாத்தியமற்றது. இந்த உலகத்தில் எத்தனையோபேர் கோடிக்கணக்கான செல்வவளங்களை பெற்றிருந்தும் கவலையோடு காட்சியளிக்கிறார்கள், பணவசதி இல்லாத பலபேர் கவலையின்றி காணப்படுகின்றார்கள், அது எப்படி இளவரசே!

அநேக போகசாதனங்களை ஒருவன் பெற்றிருந்தாலும் அவையாவும் அவனுக்கு சுகத்தை மட்டுமே கொடுக்கும் என்பது எப்படி நிச்சயம். இதிலிருந்து ஒரு பொருள் இன்பத்தை தற்காலிகமாக கொடுத்து அதுவே துன்பத்திற்கும் காரணமாக இருக்கிறது, அதனால் அப்பொருள் தரும் சுகத்தை எப்படி சுகம் என்றழைக்கமுடியும். இதன்மூலம் சுகத்தினால் பிரியம் ஏற்படும் என்ற தங்களின் கூற்று எப்படி தீர்மானமாகிறது கூறுங்கள்.

துக்கத்தை இரண்டு விதமாக பிரித்துக்கொள்வோம். உள்துக்கம்,

வெளிதுக்கம். புறஉடம்பில் நாம் அனுபவிக்கின்ற பலவிதமான நோய்கள் அனைத்தும் வெளிதுக்கம், ஆசையின் காரணத்தினால் மனதில் ஏற்படும் பல்வேறு மனக்கஷ்டங்கள், அனைத்தும் உள்துக்கம். இந்த உள்துக்கத்தினால் உலகமனைத்தும் விழுக்கப்பட்டிருக்கிறது. துக்கம் என்ற மரம் வேரூன்றி வளர, ஆசையென்ற விதையே காரணமாக அமைகிறது. இளவரசே கொஞ்சம் யோசியுங்கள். உடம்பு ஒன்றுதான் ஆனால், ஆரோக்கியமாக இருக்கும்போது சுகத்தையும், நோயுறும்போது துக்கத்தையும் அனுபவிக்கிறது.

இதனால் இந்த உலகப் பொருள்கள் அனைத்துமே துக்கம் மட்டுமே என்றறியவேண்டும். துக்கம் கலந்த சுகம், ஏன் மிருகங்கள் மற்றும் பறவைகளுக்கும் இருக்கிறது, இதனையே ஆதாரமாக வைத்து மனிதர்கள் அனுபவிக்கும் சுகம் மேன்மையானது என்று கூறுவீர்களா? உண்மையில் பார்க்கப் போனால், மிருகங்கள் மற்றும் பறவைகள் அனுபவிக்கும் சுகமே மேன்மை பொருந்தியது ஏனெனில், அவைகளுக்கு ஆசை என்ற ஒன்று கிடையாது. மனிதன் அநேக ஆசைகளினால் பிணைக்கப்பட்டு அதன் மத்தியில் அற்பசுகங்களை நிரந்தரம் என்றெண்ணி வாழ்க்கை நடத்துகிறான்.

அதேபோல பிரியமான கணவன், மனைவின் புணர்ச்சிக்கு பின்பு அதிகபளுவை சுமந்த எருதுக்கு என்ன அயர்வு ஏற்படுமோ அதையொத்த தளர்ச்



## விடுதலை

என்னால் தான் எல்லாம் நடக்கிறது எனும் நிலை அகந்தை. நம்மால் ஒரு மரத்தில் இருந்து பறித்த ஒரு இலையைக்கூட அதைப் பறித்த இடத்தில் மீண்டும் பழையபடி ஒட்ட வைக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இறைவனால் தான் எல்லாம் நடக்கிறது எனும் நிலை பக்தி. ஒவ்வொரு வயதிலும் நாம் நினைப்பது நடக்க வில்லை ஆனால் அதற்கு பதில் வேறு ஏதோ நடக்கின்றது. அப்படியானால் நமக்கு மேலே ஏதோ ஓர் சக்தி இருக்கின்றது அதையே இறைவன் என்று வைத்துக் கொண்டால் அந்த இறைவனை வெளியேயும், உள்ளேயும் தீவிரமாகத் தேடுவது யோகம்

அந்த யோகத்தை இன்று செய்யலாம், நாளை செய்யலாம் என்றும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் செய்யலாம் என்று உதாசீனமாக செய்யாமல் தொடர்ந்து பயிற்சி செய்து வந்தால், நானும் இறைவனும் ஒன்றே எனும் நிலையை அடையலாம் அதுவே ஞானம். ஞானத்தின் பலன் முக்தி. அதாவது எல்லாத் துயரங்களிலிருந்தும் விடுதலை.

குருவின் துணையிருந்தால் அகந்தை, பக்தியாகி, பக்தி யோகமாகி, யோகம் ஞானமாகி, பிறவிச்சூழலில் இருந்து விடுதலை கிட்டும்.

சியை அவன் அடைக்கிறான். இப்படியான விஷயங்களில் நீங்கள் என்ன சுகத்தை கண்டீர்கள்! கணவன், மனைவி சேர்க்கையினால் நாடி, நரம்புகளுக்கு என்ன கிளர்ச்சி ஏற்படுகின்றதோ, அதே சுகம் மிருகங்களிடமும் காணப்படவில்லையா?

எனக்கு உன்அழகை பார்ப்பதினால் சுகம் அதிகரிக்கிறது என்றால் அந்த சுகம் உங்களுக்கு கனவிலும் கிடைக்குமல்லவா! இவையாவும் அபிமானதால் உருவான சுகமன்றி வேறொன்றுமில்லை இளவரசே! உன் அழகு எனக்கு சுகத்தை கொடுக்கிறதென்றால், சிறிது வயதுமுதிர்ந்தாலோ விபத்தினால் என்முகம் விகாரமானாலோ அதே சுகம் உங்களுக்கு தொடருமா? இவையாவும் உலகபந்தங்களும், ஆசைகளுமன்றி வேறில்லை. உண்மையான இன்பம், அமைதி, மகிழ்ச்சி இவற்றிலா உள்ளது சொல்லுங்கள் என்றாள் ஹேமலேகை.

இராஜபுத்திரரே! வெளிப்புறத்திலுள்ள அனைத்தும் ஒருநாள் அழியக்கூடியதே. அழகை நீங்கள் பெரியதாக நினைத்தால் அதைவிட பெரிய அபத்தம் ஒன்றுமில்லை, அழகு ஆபத்தானது, அழகு பிரியம் அழகின்மை பிரியமின்மை என்றால் அதுவும் உண்மையில்லை. செவி வழிக்கதை ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள் இளவரசே! என்று கதை ஒன்றை கூற ஆரம்பித்தாள் இளவரசி.

**தொடரும்**


எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

## "கூட்டுப்பிரார்த்தனை"

**உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்**
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள்




வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

## குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

**குறிப்பு:** சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!




சலசலக்கும் ஆற்றில்
சருகாய் ஒரு பயணம்!
பாதையெல்லாம் முட்கள் -
தைத்தபோதெல்லாம்
தைலத்தோடு ஓடி வந்த
குருமார்கள்!
பாதாளத்தில் விழுந்தால் கூட
எழுந்து நிற்கும்
ஆன்மீக ஆசிகள்!
முருகன் அருணகிரிக்கு
சொன்னதை ஸ்ரீராமிடம்
சாய்ராம் சொன்னார்
'சும்மாயிரு!'.
அனுமன் போல்
நெஞ்சைப் பிளந்ததொரு
அனுபவம்
குருவைத் தேடி!




நீங்கள் வாழ்வில் வந்தது
நாங்களும்
பாக்கியவான்கள்
என்று பறை சாற்றவே!
நன்றிகள் குருவே!

**திரு. அருணாச்சலம் வைத்யநாதன்**
அச்சமுண்டு அச்சமுண்டு, நிபுணன்,
பெருச்சாழி, கல்யாண சமையல் சாதம்,
சா பூ திரி, திரைப்பட இயக்குனர்.


தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

**யோகி ஸ்ரீராம் பாபா**
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
**"குருவைத்தேடி"**
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.
"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
**"சாயி தாயத்து"**
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.




ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
தியான வகுப்புகள்:

# யோகி ஸ்ரீராம் பாபாவின் நேரடி பயிற்சி

## "மௌனத்தின் மூலம் தவம்"

**8 வார வகுப்புகள்**

7 வாரம் ஆன்லைன் வகுப்புகள். 8 வது வாரம்
"மௌனத்தின் மூலம் தவம்" ஒரு நாள் பயிற்சி நடைபெறும்
* பயிற்சியாளர்கள் கண்டிப்பாக நேரில் வந்து கலந்து கொள்ள வேண்டும் *

நேரம் :
பிரதி ஞாயிறு மாலை 6–7.30 வரை.
மௌன தினத்தன்று
குண்டலினி தீட்சை கொடுக்கப்படும்.
கட்டணம் – ₹ 3500/-



- பிராணாயாமம்,
- யோகாசனங்கள்,
- கிரியா விளக்கங்கள்,
- தியானம்,
- ஆத்மஞானம்,
- குண்டலினி யோகம்.

கலியுகத்தில் அனைத்தும் சுலபமாகக் கிடைக்கும் என்பது பெரியோர்கள் வாக்கு.

குருவும் பயிற்சியும் உங்கள் உள்ளங் கையில் கிடைக்கிறது. தூரமாக இருக்கிறேனே என்று ஏங்க வேண்டாம். உங்களுக்காக ஆன்லைன் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

நேரிலும் வந்து பயிற்சி எடுத்துக் கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு;
**திருமதி. மாதங்கி பாலாஜி,**
போன்: 9942219947

குரு வாழ்க! குருவே துணை! ஞான ஒளி திக்கெட்டும் பரவட்டும்!

# "வரன் தேவை"



| | |
|---|---|
| பெயர் | : **ப. சங்கமேஸ்வரன்** |
| பிறந்த தேதி | : 19.09.1985 |
| பிறந்த இடம் | : சென்னை |
| படிப்பு | : பி எஸ்சி. மைக்ரோ பயாலஜி, எம் எஸ் சி. பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் |
| திருமண நிலை | : திருமணம் ஆகாதவர் |
| தாய்மொழி | : தெலுங்கு |
| மதம் | : இந்து |
| ஜாதி | : பலிஜா நாயுடு |
| நட்சத்திரம் | : விசாகம் |
| ராசி | : துலாம் |
| கோத்திரம் | : பாலகோத்திரம் |
| சொந்த தொழில் | : (சாய் ஸ்னாக்ஸ்) |
| மாத வருமானம் | : 50,000 |
| உடன் பிறந்தோர் | : 2 மூத்த சகோதரர்கள். எந்த எதிர்பார்ப்பும் இல்லை ஜாதி தடை இல்லை. |
| முகவரி | : No.12/14,F2, ஸ்ரீ ஐஸ்வர்யா அடுக்கம், லோகநாதன் தெரு, கிருஷ்ணாபுரம், அம்பத்தூர், சென்னை– 53. Ph.73977 37577. |


## சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

**சுவாமிஜி ரமணகிரி அவர்கள் ஐரோப்பா கண்டத்தில் உள்ள ஸ்வீடன் நாட்டில் 1921, ஜூன்,19ம் தேதி. பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் அலெக்ஸாண்டர் வெஸ்டின் என்பதாகும். சுவாமிக்கு ஐந்து வயதாகும் போது தாங்கள் வசித்துவந்த அடுக்கு மாடிக்குடியிருப்பில் இருந்து தவறி கீழே விழுந்து மூர்ச்சையாகி விட்டார்கள்.**

# இரமணகிரி சுவாமிகள்

குழந்தையின் அலறல் சத்தம் கேட்டு கீழே ஓடி வந்த பெற்றோர். குழந்தை எந்தக் காயமும் படாமல் சிரித்து விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சர்யப்பட்டு குழந்தையிடம் விசாரித்தார்கள். அதற்கு சுவாமிஜி ஒரு பச்சைநிறப்பறவை ஒன்று என்னை தாங்கிக்கொண்டு கீழே இறக்கி விட்டது என்று கூறினார். அது முதலே சுவாமிஜிக்கு அந்தப் பறவையை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற தீராத ஆவல் ஏற்பட்டது.

வெஸ்டின் 1939 முதல் 1943 வரை லண்ட்ஸ்பெர்க் உறைவிடப் பள்ளியில் படித்தார். 1943 வசந்த காலத்தில் அவரது தந்தையின் திடீர் மரணத்திற்குப் பிறகு, தத்துவத்திலும், ஆன்மீகத்திலும் அதிக ஆர்வம் காட்டினார். 1944 இலையுதிர் காலத்தில், வெஸ்டின் பேராசிரியர் ஜியோ விடென்கிரெனின் கீழ் உப்சாலா பல்கலைக்கழகத்தில் இறையியல் தத்துவப் பட்டப்படிப்பைப் படிக்கத் தொடங்கினார்.1946 இல் இளங்கலைப் பட்டப்படிப்பை



முடித்தார். வெஸ்டினின் கல்விப் பின்னணி மற்றும் தனிப்பட்ட ஆர்வங்கள் அவரை கிழக்கு தத்துவங்கள் மற்றும் ஆன்மீகத்திற்கு இட்டுச் சென்றன.

குறிப்பாக, சுவாமி விவேகானந் தரின் படைப்புகளால் அவர் ஈர்க்கப் பட்டார்." ராஜ யோகா " புத்தகம் அவரது ஆன்மீக அபிலாஷைகளை வடிவமைப்பதில் முக்கிய பங்கு

**யோகி ஸ்ரீராம் பாபா**

வகித்தது. 1947 இலையுதிர் காலத்தில், துணைவேந்தர் சர்வ பள்ளி ராதாகிருஷ்ணனின் வழிகாட்டுதலின் கீழ் வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெறும் வாய்ப்பு வெஸ்டிலினுக்குக் கிடைத்தது இருப்பினும், இந்தியாவில் அவர் கழித்த காலம் அவரை கல்வித் துறையிலிருந்து விலக்கி ஆன்மீகப் பயிற்சியில் ஆழமாக ஈடுபடச் செய்தது.

விரைவில் வெஸ்டின் செல்வாக்கு மிக்க ஆன்மீக நபர்களைச் சந்தித்தார், அவர்களில் சன்யாதா என்று அழைக்கப்படும் டேனிஷ் ஆன்மீகவாதி ஆல்ஃபிரட் சோரென்சென் அடங்கும் , அவர் ரமண மகரிஷியின் போதனைகளை அவருக்கு அறிமுகப்படுத்தினார். இந்தியாவில் இருந்த காலத்தில், வெஸ்டிலின் ஒரு ஆழமான ஆன்மீக மாற்றத்திற்கு ஆளானார். அவர் ஒரு கடுமையான துறவி இந்து மரபிற்குள் ஒரு சன்னியாசியாக தீட்சை பெற்றார்.

தனது சக மாணவர்களுடன் இமயமலைக்கு யாத்திரை செல்கையில் மகாஅவதார் பாபாஜியை சந்திக்கும் பேறு கிட்டியது. அவரிடம் நயன தீட்சை பெற்றார். பின்பு இந்து மதத்தின் மீது ஏற்ப்பட்ட நம்பிக்கையின் காரணமாக சங்கராச்சாரியார் பரம்பரையில் வந்த ஒரு மகானிடம் சன்னியாசி தீட்சை பெற்றார்.

சுவாமிகள் முழுமையான சன்நியாசி வாழ்க்கையை அமைத்துக்கொண்டார். தனக்குத் தேவையான உணவை பிச்சை எடுத்து உண்டார். பணத்தை கைகளால் தொடுவதில்லை என்றும் தனக்கு கிடைக்கும் பொருட்களை பிறருக்கு தானம் செய்வதையும் பழக்கமாக்கிக்கொண்டார்.

ஒருமுறை 140 வயதான சிவசங்கரி என்ற பெண் சாமியாரை சந்தித்தார். அவர் சுவாமிஜியின் மீது மிகுந்த அன்பைச்செலுத்தி தமது சீடராக ஏற்றுக்கொண்டார். அவருக்கு சக்திவழிபாட்டு முறைகளை பயிற்றுவித்து உபதேசம்



ஸ்ரீ இரமணகிரி சுவாமிகள் ஆஸ்ரமம். சிறுமலை அடிவாரம்

வழங்கினார். அம்மையார் மறைந்த போது அவருக்கு முறைப்படி சமாதி செய்வித்து குருவிற்கு மரியாதை செலுத்தினார் சுவாமிகள்.

சுவாமிகள், தன் தாய் நாட்டையும் தன் அந்தஸ்தையும் மறந்து ஒரு இந்திய துறவியைப் போன்றே மாறிவிட்டிருந்தார். ஜடாமுடியுடன் அவரது தோற்றம் ஒரு இந்திய ஞானியைப்போன்றே இருந்தது. அவர் காசியில் வாழ்ந்த போது அவருக்கு நெருக்கமான ஒரு துறவி, உனது குரு தென்னாட்டில் உள்ளார் என்று தெரிவித்தார்.

பிறகு, தனது காசி நண்பர்களுடன் தென்னாட்டில் உள்ள ஸ்ரீ அரவிந்தரை சந்திக்கலாம் என்று முடிவெடுத்து புகைவண்டியில் வந்தபோது எதார்த்தமாக புகைவண்டியில் ஒரு இஸ்லாமியத் துறவியை சந்தித்தார். அவர் சுவாமிகளுக்கு பகவான் இரமணரின் வரலாற்றையும், உபதேசத்தையும் எடுத்துக்கூறி உனது தேடுதலுக்கு சரியான வழியை காட்டக்கூடிய மகான் பகவான் ஸ்ரீ இரமணரே என்று வலியுறுத்தவே சுவாமிகள். ஸ்ரீ அரவிந்தரை சந்திக்கும் முடிவை தவிர்த்துவிட்டு பகவான் ஸ்ரீ இரமணரை தரிசிக்கும் நோக்குடன் திருவண்ணாமலைக்குப் பயணமானார்.

புகைவண்டியின் ஜன்னல் ஓரம் அமர்ந்து வெளிப்புறக் காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்த சுவாமிகள் சிறுவயதில் தன்னை ஆபத்தில் இருந்து காத்த பச்சை நிறப்பறவையைக் கண்டு திகைத்தார். அருகில் இருந்தவர்களிடம் அந்த பறவையைப்பற்றி விளக்கம் கேட்க



ஸ்ரீ இரமணானந்த சுவாமிகளுடன் குரு ஸ்ரீராம் பாபா அவர்கள்


அது மயில் என்று அறிந்து கொண்டார்.

1949 ஆம் ஆண்டின் முற்பகுதியில், அவர் திருவண்ணாமலையில் உள்ள ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்குச் சென்றார். அங்கு அவரை வரவேற்பது போன்று ஒரு அழகிய மயில் தன் தோகையை விரித்து நின்று கொண்டிருந்தது. சுவாமிகள் பகவானை சந்தித்து ஆசி பெற்றார். அதுமுதல் தனது பழைய எண்ணங்களை எல்லாம் ஒழித்து விட்டு இரமணரின் சீடரானார்.

இரமணரின் ஒரு பார்வையிலேயே ஆழ்ந்த ஆன்மீக விழிப்புணர்வை அனுபவித்தார். அதற்குப்பின் அவர் எப்போதும் தன்னை "இந்த முட்டாள்" என்று குறிப்பிட்டார், இதனால் ஈகோவிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டார். ஸ்ரீ இரமண மகரிஷியை கௌரவிக்க, அவர் சுவாமி ரமணகிரி என்ற பெயரை சூட்டிக்கொண்டார்.

பகவான் ஸ்ரீ இரமணருக்கு எத்தனையோ சீடர்கள் இருந்தும் இரமணகிரியையே தலைசிறந்த சீடராக அனைவராலும் போற்றப் பட்டார். ஒருமுறை பகவான் இரமணகிரியை அழைத்து, அவருக்கு ஒரு தேங்காய் சிரட்டை யால் செய்யப்பட்ட திருவோடு ஒன்றைக் கொடுத்து," நீ நீயாக இரு, அடுத்த நிமிடம் இறப்பது போன்று வாழ்" என்று கூறி தனியே சென்று பயிற்சி செய் என்று கட்டளையிட்டார்.

அவரது ஆன்மீக பயிற்சி ஆத்ம




விச்சாரத்தைச் சுற்றி வந்தது, இது ஒரு வகையான சுய விசாரணை. அவரது ஆன்மீக அனுபவங்களுக்குப் பிறகு, வெஸ்டிலின் ஒரு சிறிய சீடர்கள் குழுவை ஏற்படுத்திக்க கொண்டார். செப்டம்பர் 1952 இல், அவரது சீடர்களில் ஒருவரான மதுரையைச் சேர்ந்த திரு. பாலசுப்பையா, தமிழ்நாட்டின் சிறுமலை அடிவாரத்தில் உள்ள குட்லாடம்பட்டி கிராமத்திற்கு அருகில் ஒரு சிறிய நிலத்தை வாங்கினார்.

அங்கு, வெஸ்டிலின் "ரமண பாதம்" என்ற ஆசிரமத்தை நிறுவினார், பின்னர் "ரமணகிரி சுவாமிகள் ஆசிரமம்" என்று பெயர் மாற்றினார்,

சுவாமிகள் காசநோயால் பாதிக்கப்பட்டு பல இடங்களில் சிகிச்சை எடுத்துக் கொண்டபின்பு இறுதியாக தனது சீடர் ஏற்படுத்தி யிருந்த குட்லாடம்பட்டி ஆஸ்ரமத்தில் 29. 05.1955 ஆம் தேதி தனது பிரதம சீடர் திரு. பாலுவின் முன்னால் தனது உயிரை பிரித்து கொண்டு பகவான் ஸ்ரீ இரமணருடன் கலந்தார்.

ஆசிரமத்தின் தற்போதைய தலைவர் (2025 நிலவரப்படி), சுவாமி ரமண பிரசானந்த கிரி, திரு. பாலசுப்பையாவின் பேரன் ஆவார். " குளிர் நெருப்பு" என்ற தலைப்பில் வெஸ்டிலினின் 38 மேற்கோள்கள் காட்டிய தத்துவங்களை விளக்கி ஒரு புத்தகத் தொகுப்பை வெளி யிட்டிருக்கின்றார்.

அத்வைத வேதாந்த மரபிற்கான அவரது ஆழ்ந்த அர்ப்பணிப்பை அந்தபுத்தகம் பிரதிபலிக்கிறது என்பதில் சிறிதும் அய்யமில்லை.

அனைவரும் ஸ்ரீ இரமணகிரி ஆஸ்ரமம் சென்று தரிசித்து வாருங்கள் வாழ்க்கை வளமாகும்.

ஆஸ்ரம முகவரி: சுவாமி இரமணகிரி ஆசிரமம், சிறுமலை தெற்கு அடிவாரம், ஸ்ரீ இரமணபாத ரமணகிரி நகர், குடலாடம்பட்டி, வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம்– 625218. போன்: 96260 41300.




மனதின் குணம் எதிர்பார்ப்பது தான்! அதை புரிந்து கொண்டு அதை கடந்து போவது தான் ஞானம்! சமாதி நிலையை பற்றி தெரிந்து வைத்திருப்பது நல்லது தான் ஆனால் அதை அடைய ஆசைப்படுவதே அதை அடையவிடாமல் செய்து விடுகிறது! முதலில் ஊழ்வினைகளை நாம் உணர வேண்டும். அதுவே முக்கியம்! எப்போது ஞானம் உதயமாக ஆரம்பிக்கிறது தெரியுமா? எப்போது நாம் நமது ஊழ்வினைகளை உணர்ந்து அதன் மேல் ஒரு சமாதான உடன்படிக்கைக் கொள்கிறோமோ அப்போதே ஞான உதயமாகும்!

மரணம் பற்றி முன்பே தெரிந்து கொள்வது தெரியாமல் இருப்பது, அதற்காக ஆரூடம் பார்ப்பது இதெல்லாம் பெரிய விஷயமே இல்லை! மரணம் இந்த உடம்பால் தவிர்க்கவே இயலாதது! பகவான் பாபாவே ஆயினும் மரணத்தை தள்ளிப்போடுவாரே தவிர தடுத்து நிறுத்த இயலாது! சாவதற்கு தயாராக இருக்கும் மனநிலையே ஞானம் உதயமாகும் உள்நிலை! மரண பயமே பயங்களின் தாய்! நாம் ஆன்மாவே நமக்கு அழிவே இல்லை என்று நம்பினால் கூட போதுமானது அதுவே நம்மை உணர்வுரீதியாக ஆன்மாநிலைக்கு எடுத்துச் செல்கிறது!

ஒவ்வொரு தியானமும் மரண ருசியோடு மணக்க மணக்க நம்மை பக்குவமாக சமைக்கிறது! மரணத்தை நேசியுங்கள் அது தான் உங்களை ஞான வழியில் நகர்த்தும்! உள்ளே ஒரு மரணம் நிகழும் அந்த மரணம் நம்மை அப்பாலுக்கும் அப்பால் கொண்டு செல்லும்! அந்த "அதுவே" பரப்பிரம்மம்! மதநூல்களால் தர முடியாத ஞானத்தை மரணம் மட்டுமே தர வல்லது! பிணத்தின் முன் நிற்பது சன்னிதானத்தின் முன் நிற்பது போல் – மனம் பக்குவப்பட்டால் தான் இதுவே முதலில் புரிய ஆரம்பிக்கும்! சாவது சுகம்! மனதால் கொஞ்ச நேரம் செத்தாலும் வைபோகம்!

**யோ**கி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



## யோகி ஸ்ரீராம் பாபாவின்

# இனிய மொழிகள்

**01.09.25**

*எவன் ஒருவன் தனது குருவின் முன்னால் தனது அனைத்து அறிவையும் அடக்கிக் கொள்கின் றானோ அவனே நல்ல சீடனா வான்.*

**02.09.25**

*முன் சென்ம தொடர்பில்லாமல் ஒருவன் குருவை அடைய முடியாது. குருவை அடைந்த பின்பு அவரின் செயலுக்கு அர்த்தம் அறிய ஆசைப்பட்டால், குருவை அறிய முடியாது.*

**03.09.25**

*மனித வாழ்க்கை கவலைகளால் நிரம்பியது. பிள்ளைப் பருவம், முதுமை, தோல்வி, சிரமங்கள், செயல் கள், ஆகிய அனைத்தும் கவலை களால் நிரம்பியவை. சந்தோசமும் கூட மர்மமான கவலையே! இறைவனிடம் கொண்ட பக்தி மட்டுமே இன்பமயமானது.*

**04.09.25**

*மனதால் மருகி,மாயையால் உருகி, கனவால் கருகி, பூரணம் அறியாது புலம்பித் தவிப்பதே, புவி வாழ்வு என்பதாகும். புதிராய் நினைத்தால் புரியாது போகும். பதிய நினைத்தால் பரம் பொருள் விளங்கும்.*

**05.09.25**

*உங்களுக்கு பிடித்தமான குருவைத் தேடுவது அறிவீனமாகும். குருவிற்கு பிடித்தமான சீடனாக மாறிக்கொள்வதே அறிவாகும்.*

**06.09.25**

*தனக்கு ஏற்றார் போல் உலகத்தை மாற்ற விரும்புபவன் முட்டாள்.உலகத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்பவன் அறிவாளி.*

**தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்**

**07.09.25**

நான் இப்படித்தான், என்னால் மாற முடியாது, நான் செய்வதே சரி என்பதை சற்றே விட்டு விலகிப் பாருங்கள். நான் யார் என்பதை அறிவீர்கள்.

**08.09.25**

ஒவ்வொரு ஆன்மீக சாதனைக்கும் ஒரு பாதை, ஒரு வழிமுறை, ஓர் ஒழுங்கு அவசியமாகிறது. சரியான பாதையில் செல்லாமல், ஒருவன் இது சரி, அது சரி என்று வாதிடுவது, மறுப்பது, எதிர்ப்பது ஆகியவை அவனுடைய அறியாமையைத்தான் வெளிப்படுத்தும்.

**09.09.25**

யார் ஒருவன் பெயருக்கும், புகழுக்கும் அடிமையாகாமல் இறைவனுக்கு சேவை செய்கின்றானோ, அவனுக்கு பெயரும் புகழும் தானே தேடிவரும்.

**10.09.25**

பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய மூன்றும் ஆன்மீக வளர்ச்சியின் மூன்று பரிணாமங்கள். பக்தி என்பது தொடக்கப்பள்ளி, அது ஒருவரை ஞானத்திற்கு இட்டுச் செல்லும். ஞானம் என்பதே உயர்நிலைக் கல்வி. ஞானத்தின் வாயிலாக அனைத்தையும் பிரம்மம் என்று உணர்தலே வைராக்கியம் ஆகும்

**11.09.25**

உங்களுடைய பகுத்தறிவை எப்பொழுதும் விழிப்புடன் வைத்திருங்கள். உங்களுக்குப் பயனில்லாத விசயங்களை தவிர்த்துவிட தயாராக இருங்கள். உங்கள் நேரத்தை ஒருபோதும் வீணே கழிக்காதீர்கள்.

**12.09.25**

அதிர்ஷ்டம் இருப்பவன் குருவை அடைய முடியும்.ஆனால் யாருக்கு பாக்கியம் இருக்கின்றதோ அவனே குருவை அறிய முடியும்.

**13.09.25**

உன்னைப் பார்த்து பொறாமைப் படுகின்றவர்களை ஒருபோதும் வெறுத்துவிடாதே! அவர்களைவிட நீ நன்றாக இருப்பதாக நினைக்கிறார்களே, அதற்காகவாவது அவர்களை நேசிப்பாயாக!

**14.09.25**

கோபம் கொண்டவன் எந்த முயற்சியிலும் வெற்றியடையமாட்டான். அவன் பாவங்கள் செய்வான். கேலி செய்யப்படுவான். செல்வங்களையும், மரியாதையையும் இழப்பான். ஆன்மீகப் பயணம் தொடங்கு பவனுக்கு முதல் பயிற்சி கோபத்தை கட்டுப்படுத்துதலே!

**15.09.25**

பிறருக்கு சேவை செய்வதின் முலம் நாம் செய்யும் கர்ம யோகம் நம்முடைய உள்ளத்தை தூய்மை செய்யும். அவ்வளவே! மெய் ஞானம் கிட்டுமா என்றால் கிட்டாது. அதற்கு நான் யார் என்ற விசாரணை அவசியம். விசாரணைக்கு தியானமே வழி!

விசாரணைக்குத்தான் தியானமே தவிர கண்டதையும் அடைவதற்கு அல்ல.

**16.09.25**

உடல் வளர்க்க உணவு விடுதியில் அமர்ந்து உணவிற்காக பல மணி நேரம் காத்திருக்கின்றாய். உயிர் வளர்க்க, தியான மையத்தில் அமர்ந்து தியானம் கற்க இருபது நிமிடம் காத்திருக்க முடியாமல் தவிக்கின்றாய் இதுதான் நீ படித்து பெற்ற அறிவா?

**17.09.25**

வருத்தம் தெரிவியுங்கள்! மன்னிப்பு கேளுங்கள்! உதவி செய்யுங்கள்! நன்றி கூறுங்கள்! வாழும் கலை அதுவே!

**18.09.25**

நீங்கள் சந்திக்கும் ஒவ் வொரு வரிடமும், ஒவ்வொன்றிலும் இறைவனைக் காணுங்கள். இவ்வுலகத்தின் அனைத்துப் பொருட்களிலும் இறை ரூபம் உள்ளது. அனைத்தும் இறைவனின் வெளிப்பாடே தவிர இவ்வுலகில் வேறொன்றும் இல்லை.

**19.09.25**

காலை எழுந்ததும் இறைவனின் புகழைப் பாடுங்கள். இறைவன் இல்லை என்றால் இங்கு என்னதான் இருக்க முடியும். அன்பாகவும், அமைதியாகவும்,வாழ இறைச் சேவை செய்யுங்கள்.

**20.09 25**

இந்த உலகத்தில் ஆனந்தமாய் வாழ்வதற்கு ஒரே வழி எதையும் மறுக்காமல் ஏற்றுக்கொள்வதே! எனவே வருவது அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

**21.09.25**

நீ இல்லாமலும் இந்த உலகம் இருந்தது. நாளை நீ இல்லாமலும் இந்த உலகம் இருக்கப் போகின்றது. அதற்குள் நீ பூமிக்கு வந்ததற்குண்டான முத்திரையை பதித்து விடு.

**22.09.25**

தான் பெற்ற பேரின்பத்தை மற்றவர்கள் பெற உழைப்பவரே மனிதரில் சிறந்தவர்.

**23.09.25**

இங்கு எல்லாமே நிலையற்றவை. வரும் போது நாம் ஒன்றும் கொண்டு வரவில்லை. செல்லும் போது யாரிடமும் விலாசம் கொடுக்கப் போவதும் இல்லை. பிறகு எதற்கு வீண் கவலை.

**24.09.25**

துன்பத்தை நீங்கள் அனுபவிக்க வில்லை என்றால், இன்பத்தை நீங்கள் ஒருபோதும் முழுமையாக அனுபவித்திருக்க மாட்டீர்கள். சில நேரங்களில் இன்பத்தின் மதிப்பை புரிந்து கொள்ள நாம் வாழ்க்கையின் துன்பத்தை அனுபவித்திருக்க வேண்டும்.

**25.09.25**

உங்களிடம் பக்தி எனும் குளிர்ந்த நீர் ஊற்று இருக்குமானால், கவலை எனும் நெருப்பு உங்களுக்கு

*ஒருபோதும் தீமை செய்ய முடியாது.*

**26.09.25**

*இறைவன் எல்லோருக்கும் உரியவன். அவனுடைய கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். நாம் தான் போவதில்லை. கதகதப்பு வேண்டும் என்றால் நெருப்பின் அருகில் அமரத்தான் வேண்டும். தூர இருந்து கொண்டே, சூடே இல்லையே என்று குறை சொல்லக் கூடாது. குற்றம் நெருப்புடையதன்று, நம்முடையது.*

**27.09.25**

*எல்லா இடங்களிலும் நான் மதிக்கப்பட வேண்டும் என்று நினைக்கும் அறிவே அகங்காரத்தின் ஆரம்பம்.*

**28.09.25**

*பொருளுடைமையை நம்பாது, பொய்வாழ்வை நத்தாது, இருளுறவை வேண்டாது, வெட்ட வெளியதனை விரும்பி வாழ்வது எக்காலம்?*

**29.09.25**

*வெந்ததை உண்டு நொந்து சாகாமல் இறைவன் தந்ததை கண்டு மகிழ்ந்து வாழ்வது எக்காலம்?*

**30.09.25**

*நீ நீயாகவே இருக்கும்போதும், எப்போதும், உன் முகத்தில் மாறாத புன்னகை இருக்கும் போதும், உன் ஆழ்மனதில் அமைதியுடன் இருக்கும் போதும், உன் குழப்பமான மனதிடம் இருந்து விடுதலை அடையும் போதும் மட்டும் தான் நீ சுந்திரமானவன்.* ●

## பாபாவின் செய்தி


எந்தச் சூழ்நிலையிலும் சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்கா தீர்கள். எந்த சிறு உதவி யாரிடம் பெற்றாலும், அதற்கான நன்றியை மறவாதிருக்க வேண்டும். இக்காலத்தில் நன்றி உணர்வு சிறிதும் இல்லை. பெரும் உதவிகளை பெறுகிறார்கள். அத்தனையும் மறந்து விடுகிறார்கள். அவர்களுக்கு கெடுதலும் செய்கிறார்கள். உதவி செய்த மனிதனுக்கு மறவாமல் உதவி செய்தல் வேண்டும்.



மாறாக அவனுக்கு தீங்கு செய்யும் மனிதனை விட உலகில் கீழ்த்தரமானவர் யாருமில்லை. கெடுதல் செய்தவனுக்கும் நல்லதே செய்தல் வேண்டும். இதுவே பகவான் சாயியின் எண்ணமாகும் சுவாமிக்கு கெடுதல் செய்பவர்கள், சுவாமியை தூஷிப்பவர்கள், சுவாமியை ஏளனம் கேலி செய்பவர்கள், சுவாமியைக் குறை கூறுபவர்கள் அனைவரின் நலனையும் நானே காப்பாற்றுகிறேன். எனது வாழ்க்கையே நான் தரும் செய்தி என்று பாபா அடிக்கடி கூறுவது உண்டு.

இதன்படி யார் நடந்து கொள்கிறார்கள்? யாருமில்லை. இதனால் பாபாவிற்கு ஏதாவது பாதிப்பு இருக்கின்றதா? ஒன்றுமில்லை. "எனது அறிவுரையின்படி நடப்பவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். பிறருக்கு அத்தகைய மகிழ்ச்சி கிட்டாது. எனது காலடிச் சுவடுகளைப் பின்பற்றி நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு எவ்வித கெடுதலும் ஏற்படாது" என்கின்றார் பாபா.

# சர்க்கரையை கட்டுக்குள் வைக்கும் சங்குப்பூ



செயற்கையான நிறமிக்கு பதில் உணவுகளுக்கு இயற்கையாகவே நீலநிறத்தைக் கொடுக்கக் கூடியது சங்குப்பூ. இதை வைத்துச் செய்யப்படுகிற உணவுகள் சமீப காலமாக சோஷியல் மீடியாவில் பிரபலமாகி வருகின்றன. நிறைய மருத்துவ குணங்களைக் கொண்டது சங்குப் பூ.

காபி, டீ, குளிர்பானங்களுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு, சங்குப்பூவைக் கொண்டு தயாரிக்கும் இயற்கையான, நீலநிற பானங்கள் நிச்சயம் பிடிக்கும். ஒரு டம்ளர் தண்ணீரில் நான்கைந்து புதினா இலைகள், சிறுதுண்டு இஞ்சி, நான்கு லெமன்கிராஸ் இலைகள், இடித்த பட்டைத்தூள் கால்டீஸ்பூன் ஆகிய அனைத்தையும் சேர்த்து 3 நிமிடங்கள் கொதிக்க வைக்கவும். இறக்கியதும் இனிப்புச் சுவைக்கேற்ப, தேன் அல்லது நாட்டுச் சர்க்கரை மற்றும் சில துளிகள் எலுமிச்சைப்பழச்சாறு சேர்த்துக் குடிக்கலாம்.

சங்குப்பூவில் நிறைய நோய் எதிர்ப்பு சக்தி உண்டு. உண்மையில், அவைதான் இந்தப் பூவுக்கு அதன் அழகிய நிறத்தைக் கொடுப்பவையே. அந்த நிறமிக்கு ஆந்தோசயனின் (Anthocyanin) என்று பெயர். பொதுவாக நாம் உண்ணும் உணவுகள், வளர்சிதை மாற்றத்துக்குப் பிறகு கழிவாக வெளியேறும். சில சமயங்களில் அவை நம் உடலிலேயே தங்கிவிடும். அவற்றை 'ஃப்ரீராடிக்கல்ஸ்' (free radicals) என்று சொல்கிறோம். இது அளவு தாண்டும்போது நம் செல்களை பாதித்து, அவற்றை அழித்து நோய்களுக்குக் காரணமாகிவிடும்.

சங்குப்பூவில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்ஸ் மற்றும் ஆந்தோசயனின் ஆகியவை ஃப்ரீராடிக்கல்ஸை குறைத்து, நீரிழிவு, இதயநோய்,புற்றுநோய் போன்றவை பாதிக்கும் ரிஸ்க்கை குறைக்கின்றன. செல்கள் அழிவதைத் தடுக்கின்றன என ஆய்வுகள் நிரூபித்துள்ளன. உடலில் கொழுப்பு அளவைக் குறைக்க உதவும் என்றும் சொல்லப்படுகிறது. ரத்த நாளங்கள் விரிவடைய உதவுகின்றன. ரத்தம் உறைதல் பாதிப்புக்கான ரிஸ்க்கும் குறைவதாகச் சொல்லப்படுகிறது.

தினமும் நான்கைந்து சங்குப் பூக்களை சாப்பிடுவதால், உணவின் மூலம் நம் உடலில் சேரும் கொழுப்பு வெளியேறும். சங்குப்பூவில் உள்ள ஆந்தோசயனின், ரத்தச் சர்க்கரை



அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும்.

சங்குப்பூக்களில் உள்ள ஆன்டி ஃபங்கல் மற்றும் ஆன்டி மைக்ரோபியல் தன்மைகள் தொற்று பாதிக்காமல் காக்கக் கூடியவை. மறதி நோயைத் தடுக்கும் என்று நம்பப்படுகிறது. இளமைத் தோற்றத்தைத் தக்க வைக்கும். குடல்நலம் மேம்படும். சருமத்தில் கொலாஜென் அதிகரிக்க உதவுவதால், சருமம் தொய்வடையாமல் இருக்கும். ரத்த ஓட்டம் அதிகரிப்பதால், முடி உதிர்வும் கட்டப்படும். பார்வை நரம்புகளுக்குச் செல்லும் ரத்த ஓட்டத்தை அதிகரிப்பதால், பார்வை தொடர்பான பிரச்னைகள் தவிர்க்கப்படுகின்றன. மாதவிலக்கு சுழற்சியை முறைப்படுத்தக் கூடியது. சங்குப்பூவை பயன்படுத்தி டீ, குளிர்பானம் உள்ளிட்ட பல உணவுகள் தயாரிக்கலாம்.

இதன் இலையை சாறெடுத்து, இஞ்சிச் சாறு சம அளவு சேத்து, சாப்பிட நுரையீரல் பாதை சம்பந்தமான பிரச்சனைகள் குறையும், இளைப்பு குணமாகும்.

வேரை தண்ணியில ஊறவைத்து குடித்தால், சிறுநீரைப்பெருக்கும். சிறுநீரகப் பாதையில் ஏற்படும் தொற்றுக்களையும் சரிசெய்யும்.

இதோட வேர் யானைக் கால் நோய்க்கு மருந்தா பயன்படுகின்றது. சங்கு பூக்களை வைத்து தயாரிக்கப்படும் குடிநீர், நீரிழிவு நோயாளிகளோட சர்க்கரை அளவைக் கட்டுக்குள்ள வைப்பதாகக் கூறுகின்றார்கள். மேலும், செரிமானப் பிரச்சனை, குடற்புழு, வாதம் மற்றும் கப நோய்களுக்கு சிறந்த மருந்தா இதோட வேர் பயன்படுகின்றதாக சித்த மருத்துவம் குறுகின்றது.

ஞாபக சக்தியை சிறப்பாக்க சங்கு புஷ்பத்தை கிராமங்கள்ல பயன் படுத்துகின்றார்கள். தோல் நோய் களுக்கும் இந்த செடி சிறந்த மருந் தாகின்றது பேதிக்கு கொடுக்குற மருந்துகள்ல இச்செடியின் வேரு டன் திப்பிலி, விளாம்பிசின், சுக்கு சேர்த்துச் செய்யப்படுற சித்த மருந்து, கழிச்சலை உண்டாக்கி கழிவுகளை வெளியேத்தி ஆரோக்கியம் தருகின்றது.

எனவே ஆரோக்கியம் தரும் சங் குப்பூக்களை உணவுடன் பயன் படுத்தி ஆனந்தமாக வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!



# சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
# "சாய் சங்கமம்"



சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின் சார்பில், யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்ற 12.10.25 ஞாயிறு அன்று தர்ம மிகு சென்னை அயனாவரத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. "சாய் சங்கமம்" நிகழ்ச்சி

"சங்கமம்" என்றாலே நமது நினைவிற்கு வருவது புனித நதி களான கங்கை, யமுனை, சரஸ்வதி சங்கமமாகும் இட மாகும். ஸ்ரீ சாய்பாபாவின் பெரும் அடியாரான தாஸ்கணு மகராஜ் அவர்கள் புண்ணிய




*ஸ்நானத்திற்காக திரிவேணி சங்கமம் போக வேண்டுமென்று நினைத்து பாபாவிடம் அனுமதி வேண்டியுள்ளார். "பாபா அவரிடம் அவ்வளவு தூரம் போக வேண்டிய அவசியமில்லை பிரயாகை இங்கேயே இருக்கிறது என்னை நம்பு" என்றார்.*

*அப்போது ஆச்சரியத்திலும் ஆச்சரியம் தாஸ்கணு அவர்கள் தனது தலையை பாபாவின் பாதங்களில் வைத்ததும் புண்ணிய நதிகளின் புனித நீர் பாபாவின் இரண்டு கால் கட்டை விரல்களில் இருந்து சீராக வெளிப்பட்டது. இவ்வாச்சரியத்தை கண்ட தாஸ்கணு அவர்கள் ஆழ்ந்த மரியாதை உணர்ச்சியால் பெரிதும் கவரப்பட்டார்.*

**சாய்தாசன் கோபால்**

*ஆனால் இந்த சாய் சங்கமம் முற்றிலும் மாறுபட்டது. யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் அனைத்து வேண்டுதல்களையும் ஸ்ரீ சாய்பாபா நிறைவேற்றி வருகிறார். மக்களின் சுபிட்ச வாழ்வுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் நினைத்து, பாபாவிடம் வேண்டுதல் செய்தார். வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தரும் கலியுக தெய்வம் ஸ்ரீ சாய்பாபா அவர்கள் உனது எண்ணப்படியே எல்லாம் நன்றாகவே நடக்கும் என்று அருளாசி வழங்கினார்கள்.*

*அதன்படி 1.சாய் பஜன் 2. திருவிளக்கு பூஜை 3. பிரார்த்தனை 4. ஹோமம் 5.தியானம், 6. அன்னதானம் என்று சாய் சங்கமம் உருவானது. சாய் பஜன் என்றாலே*

பாபாவுக்கு மிகவும் பிடித்தமானது. செல்வி.அமிர்தா, திருமதி. ஜெயலட்சுமி குழுவினர் இறை வணக்கத்துடன் பஜன் பாடல்களை மிகச் சிறப்பாக பாடினார்கள். பாபாவே ஆடிப்பாடி பக்தர்களை பரவசப்படுத்தியது நம் நினைவிற்கு வந்து போனது.

ஜோதி ரூபத்தில் தெய்வங்களை ஆராதனை செய்வது. வள்ளல் பெருமானே! அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி, தனிப்பெரும் கருணை அருட்பெருஞ்ஜோதி என்று அருள் பாலித்துள்ளார். ஜோதி மூலமாக அனைத்து செல் வங்களையும் பெற்று வாழ்வில் மேன்மையடைவதே விளக்கு பூஜை யின் தத்துவம். வேத விற்பன்னர் திரு. இராகவேந்திரன் அவர்கள் மூல மந்திரங்களை சொல்லி ஜோதியை ஆராதனை செய்தார்.

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி.. என்று ஆரம் பித்து, அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி! ஆனந்த அறிவோளி விளக்கே போற்றி! போற்றி! என்று திருவிளக்கு பூஜையை சிறப்பாக முடித்தார். விளக்கு பூஜை முடிந்த கையோடு, யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் ஜோதி தியானத்தை ஆரம்பித்தார். எங்கும் காணாத ஓர் தியானத்தை பக்தர்களை செய்ய வைத்தார்.

திருவிளக்கு பூஜைக்காக ஏற் றப்பட்ட ஜோதியை அனைக் காமல் அதனையே உற்று நோக்கச் செய்து சில நிமிடங்கள் கழித்து கண்களை மூடச்செய்து இரு புருவ மத்தியில் ஜோதியை தோன்றச் செய்து அப்படியே ஜோதி














தியானத்ததிற்கு இட்டுச்சென்றார்.

இருபது நிமிட தியானத்திற்குப் பின் பக்தர்கள் தங்களது அனுப வங்களை பகிர்ந்து கொண்டனர். அனைவரும் தனது இரு புருவ மத்தியில் மகாலட்சுமியை கண்ட தாக தெரிவித்தனர். அத னைத் தொடர்ந்து பிரார்த்தனை நிகழ்ச்சி நடந்தது.

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள், பக்தர்கள் மனதில் பதியும்படி அமைதியாக சாயின் அருளினை வாரி வழங்கி அனை வருக்காகவும் பிரார்த்தனை செய்தார்கள். பிரார்த்தனையின் தொடக்கத்திலேயே ஸ்ரீராம் பாபா அவர்கள் மிகச்சரியாக 11 மணியில் இருந்து 1 மணிக்குள் தனது தாய் ஸ்ரீ சமயபுரம் மாரியம்மன் அவர்கள் ஹோமத்தில் எழுந்தருளி பக்தர்களை ஆசீர்வதிப்பதாக தனக்கு வாக்கு அளித்திருப்பதாக கூறினார்.

அவர் கூறியபடி ஹோமம் ஆரம் பித்த 11 மணிக்கும் ஹோமம் முடியும் 1 மணிக்கும் ஸ்ரீ சமயபுரம் மாரியம்மன் மாரியாக (மழையாக) பொழிந்து பக்தர்களை ஆசீர்வதித் தார்கள் பக்தர்களும் பரம திருப்தி அடைந்தார்கள்.

சுதர்ஸன ஹோமத்தை பெரும் பாலும் கோவில்களில் தான் செய்வார்கள். புரட்டாசி மாதம் சுதர்ஸன ஹோமம் செய்வது மிகச் சிறப்பு. மூலிகை திரவியங்களால் ஹோமங்கள் செய்வதால், வாழ்க்கை வளமாகும். ஹோமப் புகையை சுவாசிப்பதால் சில நோய்கள் குணமாகியுள்ளதாக

சொல்கிறார்கள். ஆண்டாள் அருளிய திருப்பாவையில் 5–வது பாட்டில் "வாயினால் பாடி, மனதினால் சிந்திக்க போய பிழையும் புகுதருவான் நின்றனவும், தீயினால் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்" என்று பாடியருளிச் செய்துள்ளார்கள்.

வேத விற்பன்னர் ராகவேந்திரன் அவர்கள் மூல மந்திரங்களை ஜெபிக்க, வருகை தந்த பக்தர்களும் திரும்பச் சொன்னார்கள். "ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கிருஷ்ணாய கோவிந்தாய, என்று ஆரம்பித்து, ஓம் சுதர்சனாய வித்மஹே! மஹராஜ்வாலாய தீமஹி தன்னஸ் சக்ர ப்ரசோதயாத்! ஸ்ரீசக்ர ராஜாய மங்களம்" என்று முடித்தார். ஓம் என்ற பிரணவத்தின் ஒலி அனைத்து உள்ளங்களிலும் நிறைந்தது.



யோகி ஸ்ரீராம் பாபாவுக்கும், மந்த்ராலய மகான் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளுக்கும் ஏதோ ஒரு புண்ணிய தொடர்பு இருக்கும் போல் தெரிகிறது. மகான் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளும், யோகி ஸ்ரீராம் பாபாவும் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் வாழ்ந்தவர்கள். வேதவிற்பன்னர் இராகவேந்திரன் அவர்கள் ஹோம பூஜையை செய்தது ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளே பூஜையை செய்தது போல் ஒரு உணர்வு. ஏனென்றால், ராகவேந்திரன் அவர்கள் ஹோம விதையை போட்டார்கள். ஸ்ரீராம் பாபா அவர்கள் அதை கற்பக விருட்சமாக வளர்த்துவிட்டார்கள்.

பசித்தோருக்கும், இயலாதோருக்கும், இல்லாதோருக்கும் அன்னதானம் செய்வது புண்ணியம் மட்டுமல்ல, கர்ம வினையும் தீரும் என்று ஸ்ரீ சாயிபாபாவே கூறியுள்ளார்கள். "அன்னமே பிரம்மம் என்ற சாயி மந்திரம்! அன்னதானம் செய்வோருக்கு சாயி என்றும் அட்ஷய பாத்திரம்" என்பது சத்திய மொழி. ஹோமத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், பக்தர்களுக்கும் சிறப்பான அறுசுவை உணவு வழங்கப் பட்டது.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" இது திருமூலர் வாக்கு. ஸ்ரீராம் பாபா அவர்கள் கலியுக தெய்வம் ஸ்ரீ சாய்பாபாவின் வாக்கினை சிரமேற்கொண்டு அனைவரும் வறுமை நீங்கி வளம் பெறவும்! நோய்கள்

நீங்கி நலம் பெறவும்! இன்னல்கள் நீங்கி இன்பம் பெறவும்! தனது சற்குரு ஸ்ரீ சாயி பாபாவின் சிந்தனையில் மனதை ஈடுபடுத்தி அனைவரும் பிறவிக்கடல் நீந்த இந்த அரிய செயலான "சாய் சங்கமம்" என்ற புண்ணிய காரியத்தை யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் சாதித்துள்ளார்கள்.

பூர்வ ஜென்ம புண்ணியங்கள் இருந்தால் தான் இது போன்ற தர்ம காரியங்கள் செய்ய முடியும் என்பது ஆன்றோர் வாக்கு. யோகி. ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது பூர்வ ஜென்ம புண்ணியத்துடன் சிறப்பாக செயல்பட்டு, சாய் சங்கமம் நிகழ்ச்சியினை



வடிவமைத்து முன்நின்று மிகச்சிறப்பாக நடத்தியமைக்காக மூத்த குடிமகன் என்ற முறையில் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

ஸ்ரீ சாயியை பணிக!

அனைவருக்கும் அமைதி நிலவட்டும்!




நட்பு ஒன்றே மிகப் பெரிய வலிமை வாய்ந்த நேசம்! நட்பு வெளிப்படைத் தன்மை உடையது! அது எதையும் எதிர்பார்ப்ப தில்லை! அது நண்பனின் நலனில் மட்டுமே அக்கறை காட்டுகிறது! தன் நலம் அதற்கு இல்லை! தன் நண்பனுக்கு நடக்கும் துன்பத்தைக் கூட தனக்கு நடந்த துன்பமாய் நட்புணர்வே பார்க்கும்! அந்த நட்பு அபூர்வம்! சுயநலமற்ற மனித ருக்குத் தோன்றும் அன்புணர்வு அது!

அது பரஸ்பரம் தன்னையே அர்ப் பணிக்கும் தன்மை வாய்ந்தது! ஏன் உங்களில் சிலரால் பாபாவிடம் நட்புணர் வோடு இருக்க இயலவில்லை எனில்? அவர் முன் நீங்கள் வைக்கும் கோரிக்கை களே காரணம்! எதையும் எதிர்பார்க்காமல் பாபாவை நேசிப்பது மட்டுமே பக்தி! பாபா கடவுள் ஆகவே அவரை நேசிக்கிறேன் என்பது பக்தி இல்லை! பாபா கடவுளாக இல்லாவிட்டாலும், அவர் சாதாரண மனிதரே ஆனாலும், ஒரு துளி கூட அவருக்கு சக்தியே இல்லை என்றாலும் "அவரை நான் நேசிப்பேன்!" என்கிற அன்புணர்வே பக்தி!

அது போல் பாபாவிடம் நட்போடு உறவாட முதலில் கோரிக்கைகளை விட்டுவிட வேண்டும்! கலெக்டரிடம் ஒரு பியூனால் நட்போடு இருக்க முடியாது. காரணம் தொழில் பேதம், கோரிக்கை மனோபாவனை! ஆனால் ஆன்மிகம் அப்படி இல்லை. யாசிப்பவரும் அரசனும் ஆன்மிகப் பார்வையில் ஒன்றே! இதுவே ஆன்மிகம்! இதுவே அத்வைதம்! இந்த நட்புணர்வு உங்களுக்குள் உதயமாகி விட்டால் பாபாவை தோழனாக நேசிக்க ஆரம்பிப்பீர்கள்! எதிர்பார்ப்பு இருக்கும் வரை உண்மையான நேசம் உதயமாவ தில்லை! அது உதயமாகி விட்டால் ஆன்ம ஞானம் என்பது தூரம் இல்லை!



ஜடப்பொருட்கள் எல்லாவற்றிலும் நிலை பெற்று அவைகளைக் கட்டுப் படுத்துகிறார்.

சாயியை சரணாகதி அடையும் பக்தர்களும், முழுமனதாக அவரை வணங்குவோரும் அனுபவப்பூர்வமாக இதை உணர்கிறார்கள். சாயிபாபா சர்வ வியாபி. பிறப்பற்றவர், இறப்பற்றவர், அழிவற்றவர். அவர் எல்லா உயிர்களிடமிருந்தும் அன்பைத் தவிர வேறெதையும் விரும்பவில்லை. அன்பும் கருணையும் நிறைந்த பாபா பூதவுடலைத் துறக்கும் முன் கீழ்கண்ட புனிதமான அமுத மொழிகளைக் கூறினார் .

# பரம்பொருள் சாயி

பரம்பொருளாகிய சீரடி சாயி பாபா அண்ட பேரண்டங்களிலும் வியாபித்திருக்கிறார். தான் அவதரித்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக இவ்வுலகில் வந்து குறிக்கோள் நிறைவேறியதும் பூதவுடலைத் துறந்து வரையற்ற பண்புக் கூற்றையடைந்தார். அவர் அழியும் இவ்வுடலைத் துறந்தாலும் உயிருள்ளவை மற்றும்

"நான் இறந்துவிட்ட போதிலும் என்னை நம்புங்கள். எனது சமாதியில் உள்ள எலும்புகள் உங்களுக்கு நம்பிக்கையையும் தைரியத்தையும் அளிக்கும். என்னிடம் முழுமையாக சரணடைபவர்களுடன் எனது சமாதியும் பேசும் தொடர்பு கொள்ளும்".

"நான் உங்களிடத்து

இல்லையென்பதாகக் கவலை கொள்ளாதீர்கள். எனது எலும் புகள் உங்களது நலத்தைக் பேசி விவாதிப்பதைக் கேட்பீர்கள்".

"என்னையே எப்போதும் நினைவு கூருங்கள். உள்ளம் உயிர் இவற்றால் என்னை நம்புங்கள். நீங்கள் மிகுந்த பலனை அடை வீர்கள்"

"யார் ஷீரடி மண்ணில் கால் வைத்தாலும் அவரது துன் பங்கள் முடிவுக்கு வந்துவிடும். உங்களது எல்லா விருப்பங்களும் நிறைவேற்றப்படும். நீங்களும் சந்தோஷமாக இருப்பீர்கள்".

"என்னை எவன் மிகவும் விரும்பு கிறானோ அவன் எப்போதும் என்னை காண்கிறான். இடைய றாது என்னையே தியானித்து என் நாமத்தையே ஸ்மரணம் செய்கின்றவனுக்கு நான் கடன் பட்டதாக உணர்கிறேன். அவனுக்கு விடுதலையை (தன்னை உணர்தல்) அளித்து எனது கடனைத் தீர்ப்பேன்".

"புலன் உணர்வுகளின் விஷ யங்கள் தீமையானது. விவேகம் என்னும் சாரதியைக் கொண்டு மனதைக் கட்டுப்படுத்தி உணர்வு களை தாறுமாறாக அலைய விடாமல் இருக்க வேண்டும்".

"என்னை நினைவில் கொண்டி ருப்பவர்களை நான் எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். எவர் என்னை அன்புடன் கூப்பிடு கிறாரோ, அவரிடம் ஓடி சென்று வெளிப்படையாகக் கலந்து கொள்கிறேன்".

"எவரொருவர் பிறர் மீது குறை கூறி குற்றம் கண்டு குதர்க்கம் செய்கிறாரோ அவர் என்னை காயப் படுத்துகிறார். ஆனால் எவர் மிகப் பொறுமையுடன் இருக்கிறாரோ அவர் என்னை அதிகமாக சந்தோஷப்படுத்துகிறார்".

"எவன் என்னை அறிந்து கொள்ள முற்படுகின்றானோ, அதற்கு முன்னால் நான் அவனது வீட்டிற்கு வந்து விடுவேன்".

யாருடைய பாவங்களெல் லாம் மறக்கப் படுகிறதோ அந்த அதிர்ஷ்டசாலிகளே என்னை வணங்கும் பாக்கியத்தை பெறுவார்கள்.


பாபாவே ஒரு மனிதரை அழைத் தாலன்றி அவரருகில் யாருமே செல்ல முடியாது. சீரடிக்கு வருவது, அங்கு தங்குவது, கிளம்புவது அனைத் துமே பாபாவின் விருப்பப் படிதான் நடக்கும்.

என்னுடைய கதைகளை கவனமாக கேளுங்கள். அவை களைப் பற்றி நினையுங்கள்.எனது ஆசி இல்லாமல் என்னுடைய கதைகளை கேட்கும் பாக்கியம் யாருக்கும் கிடைக்காது.

எப்போதும் திருப்தி உள்ள வனாக இரு. சஞ்சலத்திற்கோ கவலைக்கோ எப்போதும் இடம் கொடுக்காதே. நீ துவாரகாமாயியின் குழந்தை. துவாரகாமாயியின் நிழலில் வாழ்பவர் சுகத்தையும் சாந்தியையும் அளிக்கும் சிம்மா சனத்தில் உட்கார்ந்தவர் ஆகிறார்.

அற்புதங்கள் பல புரியும் சாயி நாதனின் திருவடிகளை வணங்குவோம்.

# வாசகர் குரல்...




**அ**கங்காரம் பெட்டிச் செய்தியின் மூலம் அகங்காரம் புறப்படும் இடத்தை மிக நன்றாக தெரிந்து கொண்டேன் அய்யா. சிறிய செய்தியாயினும் பெரிய செய்தியை சொல்லித்தந்தது. மற்ற பெட்டிச் செய்திகளும் மிகவும் சிறப்பு. மிக்க நன்றி சாய்ராம்.

**திரு. சுப்பிரமணியன்,**
**திருச்சி.**

**ந**ரசிம்ம சுவாமியின் அனுபவம் கட்டுரையை படித்ததும் என் மனதை எண்ணவோ செய்தது. கட்டுரையில் வரும் ராம் பாபாவைப் போலவேதான் நானும் செய்திருப்பேன். கட்டுரையை முழுமையாக படித்தபோதுதான் கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் சாயிபாபா எப்படி எல்லாம் நம் முன் தோன்றுவார் என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. நாமும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற படிப்பினையும் அறிந்து கொள்ள முடிந்தது.

குருஜிக்கு மிக்க நன்றி!

**- திருமதி. லதா பாஸ்கரன்,**
**அண்ணாநகர்.**

**யோ**கி ஸ்ரீராம் பாபாவின் இனிய மொழிகள் அற்புதமாக இருக்கின்றது. எந்த சமரசமும் இன்றி பொட்டில் அடித்ததைப் போன்று அன்மீக செய்திகளை சுருங்கச் சொல்லி விளக்கியிருப்பது சிறப்பு. தொடரட்டும் உங்களது ஆன்மீகப் பணி.

**- கவிஞர்.பாலமுருகன்.**
**தேனி.**

**உ**ண்மையான ஆனந்தம், நரசிம்ம சுவாமியின் அனுபவம் இரண்டு கட்டுரையும் மிகச்சிறப்பாக இருந்தது. மற்றபடி அனைத்து செய்திகளும் எப்பவும் போல் நன்றாக இருந்தது. குறிப்பாக வாத நாராயணன் கீரை பற்றி புதிதாக நிறைய தெரிந்து கொண்டேன்.

**- திருமதி. பிரியாமணி.**
**திருவள்ளூர்.**

**கு**ருவுடன் இலங்கைப்பயணம்

# கண்குளிர தரிசித்தேன்

கட்டுரை நன்றாக இருந்தது. எனது நெடுநாள் ஆசையாகிய இலங்கைப் பயணத்திற்கு நானே நேரில் சென்று வந்ததைப் போன்று இருந்தது. திரு. பாலாஜி அவர்களுக்கு நன்றி! இதைப்போன்று குருவுடன் பயணித்த அனுபவங்களை தொடர்ந்து வெளியிட்டால் மிகவும் நன்றாக இருக்கும். நாங்களும் குருவுடன் மாதாமாதம் பயணித்தைப் போன்று இருக்கும்.

**– திருமதி. நாராயணி ராமசந்திரன், குடந்தை**

**க**சவனம்பட்டி சுவாமிகள் கட்டுரை படித்த உடன் உடனடியாக கசவனம்பட்டி சென்று சுவாமிகளை தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் பிறந்துவிட்டது. ஆனால் எனது அலுவலகப் பணி வட மாநிலங்களிலேயே இருந்தது. வருத்தத்தோடு என் பணிச்சூழலை நினைத்து நொந்து கொண்டேன். ஆனால் சுவாமியின் லீலையோ எண்ணவோ, சென்ற 15.10.25 அன்று மதுரைக்கு அனுப்பியது எனது அலுவலகம். வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு கசவனம்பட்டி சென்று சுவாமிகளை கண்குளிர தரிசித்தேன். மிக்க நன்றி அய்யா.

**– திரு. கண்ணன், தாம்பரம்.**

**இ**தழைத்திறந்ததும் அமுத மொழியைப் படித்துவிட்டு புத்தகத்தை பத்து நிமிடங்கள் மூடிவைத்து விடுவேன். ஏனென்றால் ஒவ்வொரு மாதமும் எனக்காகவே எழுதியதை போன்று இருக்கும் அமுத மொழிகளை நினைத்து ஆழமாக சிந்திப்பேன். மனதிற்கு சுகமாக இருக்கும். ஒவ்வொரு மாதமும் பாபாவே எனக்கு கூறியதைப்போன்றே இருக்கும். நன்றி சாய்ராம்.

**– திருமதி. தர்ஷினி, குரோம்பேட்டை.**

**சா**யி சரிதம் மிக எளிமையாகவும், புரியும்படியும் சென்று கொண்டிருக்கின்றது. சாய் சத்சரிதத்தில் படித்தும் புரியாமல் இருந்த ஈஷாவாஸ்ய உபநிசத விளக்க கதை உங்களின் எளிமையான எழுத்துக்களில் புரியும் படி இருந்தது. நன்றி குருவே!

**– திருமதி. புவனேஷ்வரி, ஒசூர்.**

**உ**ங்களுடைய சாயி மகராஜ் குருவைத்தேடி மாத இதழை தொடர்ந்து படித்துவருகின்றேன். அனைத்து கட்டுரைகளும், செய்திகளும் நன்றாக இருக்கின்றது. உங்களுக்கும், உங்களது ஆசிரியர் குழுவிற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**– திரு. தட்சிணாமூர்த்தி, கோவை.**

**வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**


**சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org**

**சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 9941816692**

# அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால்
காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: 9941816692

## இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.இரா.சுவாமிநாதன்.கொளத்தூர். ரூ.3500.
குழந்தை. சாய் சங்கமித்ரா, கொளத்தூர். ரூ.3500.
திருமதி. ஹேமாவதி நமச்சிவாயம், சாலிகிராமம். ரூ.2000.
திருமதி. மீனாகுமாரி, அண்ணாநகர். ரூ.2000.
திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.
திருமதி.பி. மகாலட்சுமி, மதுரை. ரூ.1000.
திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.
திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திருமதி. உமா மகேஸ்வரி, அயனாவரம். ரூ.1000.
திருமதி.லலிதா, துரைப்பாக்கம்.ரூ.500.
திரு. வீ. கவிதா, சென்னை. ரூ.500.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.
திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி, ரூ.500.
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திரு. N. வெங்கடாசலம், டி.நகர். ரூ.500.
திருமதி.அலமேலுமங்கை ஜெகதீசன், AYK, ரூ.500.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திரு. அசோக், AYK, ரூ.200.
திரு. சுபாஷ் சந்திரபோஸ், அம்பத்தூர். ரூ.200.
திரு. கோபால்சாய், விருகம்பாக்கம்.ரூ.200
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார், பெரவள்ளூர். ரூ.200.
திரு.பி. சத்யமூர்த்தி, போரூர். ரூ.200.
திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.200.
திரு. நித்யானந்தம், ஓரகடம். ரூ.200.
திரு. வா.சூரியகுமார் கேபிள் TV. மாவுத்தன்பட்டி, ரூ.150.
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100
திரு. செல்வவிநாயகம், மணலி. ரூ.100.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு. ராஜேஸ், கூடுவாஞசேரி. ரூ.100.
திரு. மேகநாதன், சென்னை. ரூ.100.
திரு. மகேஸ்வரி, தாம்பரம். ரூ.100.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

# சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** – **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** – **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** – **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** – **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

**V.ஸ்ரீராம்,** ஆசிரியர்

**99418 16692, 88258 31068**

'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

**ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...**

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.







எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு




## அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


## குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.




தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

## தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!




* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

## சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்




100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்




## அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

## அமிர்தா வேலம்பட்டை பல்பொடி




பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068